வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

507/1.53.

ஜனவரி 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

6 அணா



...ரெஸாக்...

THE VAKIL ✦ TAMIL LAW MAGAZINE

1953-ம் வருடத்தில் சென்னை சர்க்கார் விடுமுறை நாட்கள்

*ஞாயிற்றுக்கிழமைகள்

*ஒவ்வொரு மாதமும் (நவம்பர் தவிர) கடைசி சனிக்கிழமைக்கு முந்திய சனிக்கிழமை.

*மற்ற விடுமுறை நாட்கள்:-

மாதம்.	தேதி.	கிழமை.	எதற்காக விடுமுறை.
ஜனவரி	1	வியாழன்	இங்கிலீஷ் புது வருடப் பிறப்பு
,,	13	செவ்வாய்	போகி
,,	14	புதன்	பொங்கல்
,,	26	திங்கள்	குடியரசு தினம்
பிப்ரவரி	12	வியாழன்	மஹா சிவராத்திரி
மார்ச்சு	16	திங்கள்	தெலுங்கு வருடப் பிறப்பு
ஏப்ரல்	3	வெள்ளி	புது வெள்ளி
,,	13	திங்கள்	தமிழ் வருடப் பிறப்பு.
ஜூன்	30	செவ்வாய்	அரை வருட பாங்கு கணக்கு முடிப்பு தினம் (சர்க்கார் ஆபீசுகளுக்கு கிடையாது.)
ஆகஸ்டு	15	சனி	சுதந்தர தினம்
,,	21	வெள்ளி	பக்ரீத்
,,	24	திங்கள்	ஆவணி அவிட்டம்
,,	25	செவ்வாய்	ஸ்ரீ நாராயண குரு தேவர் தினம் மலையாளம் ஜில்லாவுக்கு மட்டில்
,,	31	திங்கள்	ஸ்ரீஜயந்தி
செப்டம்பர்	12	சனி	விநாயக சதுர்த்தி
அக்டோபர்	2	வெள்ளி	மகாத்மா காந்தி பிறந்த நாள்
,,	7	புதன்	மஹாலய அமாவாசை
,,	15	வியாழன்	ஆயுத பூஜை
,,	16	வெள்ளி	ஆயுத பூஜை
,,	17	சனி	ஆயுத பூஜை
நவம்பர்	5	வியாழன்	தீபாவளி
,,	6	வெள்ளி	தீபாவளி
,,	20	வெள்ளி	மீலாடி நபி
டிசம்பர்	16	புதன்	வைகுண்ட ஏகாதசி
,,	25	வெள்ளி	கிருஸ்த்மஸ்
,,	31	வியாழன்	வருடாந்தர பாங்கு கணக்கு முடிப்பு தினம் (சர்க்கார் ஆபீசுகளுக்கு கிடையாது.)

"வக்கீல்"
பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை
ஆசிரியர் கமிட்டி
ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,
[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷ வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப் படும். (பொருள் அட்டவணை தேவை யில்லாதவர்கள் அணா 8 கழித்துக் கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப் பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுர மாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப் பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர் களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—
மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"
(விளம்பர விகிதம்)
ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ.	60
ஷ ... அரைப் பக்கம்	ரூ.	35
ஷ ... கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் - அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப் படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 ஜனவரி 1953 இதழ் 1

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்! .. 3
புதிய சட்டங்கள் .. 5
தஞ்சை சாகுபடிதார்-பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் .. 7
ஷ சட்ட விதிகள் .. 11
குத்தகை சீட்டு நமூனா .. 12
கண்ட்ரோல் .. 14
வழக்கும் - தீர்ப்பும்
*கடன் வாங்கியவர் கடனைத் தீர்க்கக் கையாண்ட குறுக்கு வழி. மோசடி செய்த குற்றத்திற்காக தண்டனை அடைந்தார். .. 15
*இவர் திருமணம் செய்து கொண்டது ஒரு ஸ்திரீயுடன் அல்ல. இது மணமாகுமா! பம்பாய் ஹைகோர்ட்டில் ருசிகரமான வழக்கு. .. 17
*முஸ்லீம் மைனருக்கு அண்ணனைக்கார்டியனாக வைத்து எழுதப்பட்ட 'செட்டில்மெண்ட்' பத்திரம் செல்லவில்லை. மைனருடன் சேர்ந்த 'மேஜர்'களுக்கும் செல்லவில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு. .. 18
*டிக்ரிக் கடனுக்காக "விவசாயியின் வீட்டையும் காலி நிலத்தையும் ஜப்தி செய்யலாமா? .. 19
தொழிலாளர் பகுதி .. 21
சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம்—1950 .. 26
கேள்வியும் - பதிலும் .. 29

எமது அன்பர்களுக்கும்

வாடிக்கைக்காரர்களுக்கும்

எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்:

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதுரை.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

~ அன்னகிளி ~

சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38 :: தஞ்சாவூர்

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றமும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12.

சிறிய ,, ,, ,, அணா 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை S. Ry.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 5 ஜனவரி 1953 இதழ் 1

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

1953 ஆம் ஆண்டு பிறந்து விட்டது. அத்துடன் "வக்கீல்" பத்திரிகையின் ஐந்தாவது மலரை அன்பர்களின் கையில் கொடுக்கும் இச்சந்தர்ப்பத்தில், "வக்கீல்" சந்தா தாரர்களுக்கும், வாசகர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும் மற்ற அன்பர்களுக்கும் "வக்கீலின்" புத்தாண்டு வாழ்த்துக்களை யும் இம்மலருடன் சேர்த்து அனுப்பு கின்றோம். வருங்காலத்தில் "வக்கீலின்" சேவை பன்மடங்கு அதிகமாக்கப்படும் என்ற உறுதியையும் மகிழ்ச்சியையும் நேயர்களிடம் தெரிவித்துக் கொள்ளு கிறோம்.

*

தஞ்சையின் புயல்கள்

தமிழகத்தின் தோட்ட மென்றும் களஞ்சிய மென்றும் அழைக்கப்பட்டுவரும் தஞ்சை ஜில்லாவில், சில காலமாகப் புயல் மேல் புயலாக அடித்துக் கொண்டிருப் பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். ஆனால் இவை எல்லாம் ஒரே வகைப் புயல்கள் அல்ல.

சென்ற பொதுத் தேர்தலிலேயே தஞ்சையின் முதல் புயல் அடித்துவிட்டது. தஞ்சை ஜில்லாவானது நெல் பயிர் சாகு படி செய்யத்தான் தகுதியுள்ளதென்று நினைத்து வந்தவர்கள் தங்களுடைய தவறை உணர்வதற்குள், அங்கு வேறு ஒரு வகைப் பயிர் நன்றாக வளர்ந்து விட்டது, தெரிந்தது. 'கம்யூனிஸம்' என்ற பொது உடைமைக் கொள்கைகளை இந்தியாவில் வளர்ப்பதற்கு நல்லதோர் நாற்றங்காலாகத் தஞ்சையும் பொறுக்கி எடுக்கப்பட்டது. அப்பயிரும் நன்றாக வளர்ந்ததன் விளைவாகவே தஞ்சை ஜில்லா தான் அதிக எண்ணிக்கையுள்ள கம்யூனிஸ்ட் மெம்பர்களைச் சட்டசபை களுக்கு தேர்ந்தனுப்பியது. இது தான் தஞ்சையின் முதற் புயல்.

இப்புயலின் வேகத்தைத் தணிக்கவே சென்னைச் சர்க்கார் வேறொரு செயற்கைப் புயலைத் தஞ்சையில் புகுத்தினர். இது தான் தஞ்சை அவசரச்சட்டம். இச்சட்டத் தால் தஞ்சை மக்கள் யாவருடைய மனங் களும் நிம்மதி இழந்தன. நிலக்காரர்கள் நிலத்தை இழந்து விட்டதாகப் பயப்பட்ட னர். சாகுபடிதாரர்கள் நிலம் இன்னும் தங்களுக்குப் பட்டா ஆகவில்லையே என்று ஏங்கினர். பாத்தியா பாத்தியங்கள் நன்றாகப் புரிந்தால் அல்லவா இரு தரப்பி னருக்கும் சாகுபடியில் மனது ஈடுபடும்? அந்நிலை இன்னும் ஒருவருக்கும் தஞ்சை யில் ஏற்படவில்லை.

மழை பெய்ய வேண்டுமென்று ராஜாஜி அவர்கள் சென்னையிலிருந்து கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த அதே சமயத்தில், அவருடைய மனப் பிரமையைப் பரிகசிப்பது போல்,

இயற்கை அன்னை தஞ்சை திருச்சி ஜில்லாக்களில் சில மணி நேரம் கோர தாண்டவமாடினுள். தமிழ்நாடு என்றும் கண்டிராத மாபெரும் புயல் சென்ற நவம்பர் முப்பதாந் தேதியன்று தஞ்சையைத் தாக்கியது. வெகு தூரம் வரை கடல் உட்புகுந்தது; மடிந்த மக்கள் பலர்; லட்சக் கணக்கான மரங்கள் சாய்ந்தன; கூறைகள் பறந்தன; வீடுகள் இடிந்தன; ரயில்கள் நின்றன; தந்திக் கம்பிகள் அறுந்து போயின; ஜனங்கள் அல்லோல கல்லோலமாக ஸ்தம்பித்துப் போயினர். எல்லாம் மூன்று நான்கு மணி நேரத்தில். தஞ்சை ஜில்லாவில் இப்போது ஒரு வாழை கூட இல்லை. ஒரு வெற்றிலைக் கொடிக்கால் கூட இல்லை. தென்னை மரங்களும், மா மரங்களும், புளிய மரங்களும் விழுந்து விட்டன. தண்ணீர் இல்லாமல் தவித்த நெல் பயிர்கள் புயலின் வேகத்தினுல் தத்தளித்தன. சென்னைச் சர்க்காருக்கும் சென்னையில் வெளியாகும் பிரபல ஆங்கில, தமிழ் தினசரிப் பத்திரிகைகளுக்கும் தஞ்சையின் அவதி நாலைந்து நாட்களுக்குப் பின்பு தான் தெரிந்திருக்கிறதென்றுல் தஞ்சை மக்களின் அவதியை மற்ற ஜில்லா நேயர்கள் ஊகித்துக் கொள்ளலாம்.

இப்புயல்களின் விளைவு என்ன ஆகிறதென்று பார்ப்போம்!

*

'லெவி'யைத் தளர்த்த வேண்டும்

சென்னைச் சர்க்காரின் புதிய 'லெவி'க் கொள்முதல் என்ற குத்து மதிப்புக்கொள் முதல் உத்தராவனது தமிழ் நாட்டில் தஞ்சை ஜில்லாவுக்கு மட்டில் தான் உண்டு. இவ்வுத்தரவின்படி தஞ்சையிலுள்ள நிலத்தின் சொந்தக் காரர்களும் சரி, குத்தகை அல்லது வேறு வகை சாகுபடிக்காரர்களும் சரி ஏகர் ஒன்றுக்கு இவ்வளவு மூட்டை என்ற கணக்கில் நெல்லை கண்ட்ரோல் விலைக்குச் சர்க்காரிடமே விற்க வேண்டும். இது அமுலுக்கு வந்து விட்டது. இவ்வருஷம் இவ்வுத்தரவை அமுலுக்கு கொண்டு வருவது நியாயமல்ல என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன:—ஆறுகளில் வந்த தண்ணீர் நெல் சாகுபடிக்குப் போதவில்லை. பக்குவமழை பெய்யவில்லை. வாடின பயிர்களுக்குப் புயலினுல் சேதம். புயலினுல் ஏற்பட்ட வேறு வகைச் சேதங்களை ஒழுங்குபடுத்த, தஞ்சை மக்களுக்கு அவகாசமும் அதிகமான பணமும் வேண்டும். உணவு அகப்படாத பக்கத்து ஜில்லாக்களி லிருந்து தஞ்சைக்குள் ஏராளமான ஏழை மக்கள் வந்திருக்கிறனர். அவர்களுக்கும் தஞ்சை அன்னமளிக்க வேண்டும்.

இக்காரணங்களினுல் 'லெவி'க் கொள் முதல் உத்தரவை சர்க்கார் அடுத்த பசலி முதல் ஒத்திப் போடுவதுதான் நியாயமாகும். அப்படிச் செய்ய முடியா விட்டாலும், தஞ்சையில் 'லெவி' அளவைத் தளர்த்தி, அதனுல் குறையக் கூடிய நெல்லை மற்ற ஜில்லாக்களில் உபரி நெல் விற்கக் கூடிய பெரு நிலக்காரர்களிடமிருந்து அதே விகிதப்படி கொள்முதல் செய்வதன் மூலம் ஈடு செய்து கொள்ளலாம். நெல் விற்கக் கூடிய அளவு நில முள்ளவர்கள் தஞ்சையிலிருந்தாலென்ன மற்ற ஜில்லாவில் இருந்தா லென்ன? ஏன் இந்தப் பாரபட்சம்?

*

சென்ற மாதம் "வக்கீல்" ஏன் தாமதமாக வெளிவந்தது?

"வக்கீல்" பத்திரிகை ஆரம்பித்த நாளாக, ஒவ்வொரு மாதமும் தவருமல் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப் பட்டு வந்தது. சென்ற டிசம்பர் மாத இதழையும் அவ்விதமே முதல் தேதியில் பிரசுரம் செய்யத்தான் தயார் செய்து கொண்டிருந்தோம். கடைசிப் பக்கங்கள் அச்சிலிருந்த சமயத்தில் அச்சுயந்திரத்தை ஓட்டும் மின்சார வசதி, புயல் காரணமாக ஜில்லா எங்கும் திடீரென்று நின்றுவிட்டது. மறுபடியும் வேலை தொடங்க ஐந்து நாட்கள் தாமதமாயின. அதனுல் தான் சென்ற மாத இதழ் அனுப்ப ஒரு வாரம் தாமதம் ஏற்பட்டது. அதற்குள் ஏன் "வக்கீல்" வரவில்லை என்று நூற்றுக்கணக்கான நேயர்களின் கடிதங்கள் ஒவ்வொரு நாளும் கிடைத்தன. அவ்வன்பர்களுக்கு ஏற்பட்ட சிரமத்திற்காக வருந்துகிறோம். எதிர் பாராமல் ஏற்பட்ட தாமதம். மன்னிக்கவும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1952-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசை யாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

1. சென்னை சர்க்கார் எடுத்துக் கொண் டிருக்கும் சொத்துக்களை அவர்களே நீடித்து வைத்துக் கொள்ளவும் அவைகளை சர்க்காரே விலைக்கு எடுத்துக் கொள்வதற்குமான சட்டம். Madras Requisitioned Land Continuance of Powers Act 1952 (20—7—1952) இது ஒரு தாற்காலிகச் சட்டம். 1—4—1953 வரைதான் அமுலில் இருக்கும். 1952ஆம் வருடத்தில் யுத்த காலத்தில் சர்க்காருக்குத் தேவையான ஸ்தாவர சொத்துக்களை சர்க்கார் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்வதற்காக முதல் முதலில் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தி லுள்ள அதிகாரங்களை உபயோகித்து விதிகள் ஏற்பட்டன. பாதுகாப்புச் சட்டம் ரத்தான பிறகு இவ் விஷயத்திற்காக மட்டில் அவ்வப் பொழுது சட்டங்கள் இயற்றப் பட்டு வரு கின்றன. இதற்கு முன் இதற்காக இயற்றப்பட்ட 1951-ஆம் வருடத்திய சென்னைச் சட்டம் ரத்தாகும் சமயத்தில் சென்னை கவர்னர் அவர்கள் முதலில் ஒரு அவசரச் சட்டமும் பிறகு ஒரு அவசரச் சட்ட மும் செய்து 1951-ஆம் வருடச் சட்டம் நீடிக்கப் பட்டது. இப்பொழுது இச் சட்டம் சென்னை சட்ட சபைகளாலேயே இயற்றப் பட்டுள்ளது. இதுவும் 1—4—1953 வரையில்தான் அமு லில் இருக்கும். சர்க்கார் எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் சொத்துக்களை திரும்ப சொந்தக்காரர்களுக்கு விட்டுக் கொடுப்பது பற்றியும், சர்க்காரே அச் சொத்துக்களை விலைக்கு எடுத்துக் கொள்வது பற்றியும் நஷ்ட ஈடு கொடுப்பது பற்றியும் பல ஷரத்துக்கள் இச்சட்டத்தில் இருக்கின்றன.

4. சென்னை அரசாங்கச் செலவு சட்டம். Madras Appropriation No. 2 Act 1952. (1-8-1952) — 1—4—1952 முதல் ஆரம்ப மாகும் நிதி வருடத்தில் பொது நிதியிலிருந்து ஏற்கனவே சென்னை 1952-ம் வருடத்திய 2வது சட்டத்தில் கண்ட தொகைகள் உள்பட மொத்தம் ரூ. 1,06,87,12,900 செலவு செய்ய சென்னை சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

5. பவானி நீர்த் தேக்க பாசன செஸ் சட்டத் திருத்தம். Bhavani Reservoir Irrigation Cess—Amendment - Act 1952 (24—11—1952). இச்சட்டப்படி அதிகபட்ச மாக விதிக்கக் கூடி தண்ணீர் தீர்வையின் விகிதம் திருத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஏகர் 1-க்கு ரூ. 9க்கு மேல் தண்ணீர் தீர்வை விதிக்கக் கூடாதென்று இருந்ததற்குப் பதிலாக —பருத்திக்கு ஏகர் 1-க்கு ரூ. 20க்கு மேலும், நெல்லுக்கு ஏகர் 1-க்கு ரூ. 15க்கு மேலும், மற்ற தானியங்களுக்கு ஏகர் 1-க்கு ரூ. 7-8-0 க்கு மேலும் போகாதபடி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படலாம். மற்ற பயிர்களுக்கு அவ்வப் பொழுது சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் விகிதத் திற்கு மேல் போகாதபடி விதிக்கப்படலாம்— என்று திருத்தப் பட்டிருக்கிறது. மேலும் தண்ணீர் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் பர்மிட்டில், எவ்வளவு காலம் தண்ணீர் எடுத்து கொள்ளலாம், என்ன பயிர் சாகுபடி செய்ய வேண்டும், எந்த இடத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை களும் விதிக்கப்படலாம் என்று சட்டம் திருத்தப் பட்டிருக்கிறது.

6. மது விலக்குச் சட்டத் திருத்தம். Madras Prohibition Amendment Act—1952. மது விலக்குச் சட்டத்தில் புதிதாக செக்ஷன் 21A—என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புது ஷரத்துப்படி அன்னிய நாட்டு மது பானங்களை, பர்மிட் வைத்திருக்கும் தனி நபர்களுக்கும் ஸ்தானங் களுக்கும் விற்பனை செய்பவர்கள், அவர்களிட மிருந்து ரூபாய் 1-க்கு அணா 8 வீதம் ஒரு விற்பனைவரி வசூல் செய்து சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும். இவ்விகிதத்தை அவ்வப் பொழுது மாற்றவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மதுபானத்தின் விலையின்மீது இவ்வரி வசூலிக்கப்பட வேண்டும். அன்னிய நாட்டு மது பானம் என்றால், தீர்வைப்பட்டியல் சட்டப்படி வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்குள் வரும் ஒயின், ஸ்பிரிட் பீர், இவைகளைக் குறிக்கும்.

7. ஜில்லா போர்டு திருத்தச் சட்டம் Madras District Boards Amendment Act 1952 (22-11-1952) சென்னை ராஜ்யத்தி லுள்ள எல்லா ஜில்லா போர்டு மெம்பர்களின் பதவிக்காலமும் 1-12-1952உடன் முடிவடைவ தாக இருந்தது இத்திருத்தச் சட்டத்தால்

1—7—1953 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இது விசாகப்பட்டணம் ஸ்ரீகாகுளம் ஜில்லா போர்டுகள் சம்பந்தப்பட்ட வரையில் இல்லை.

8. சம்பள சட்டத் திருத்தம் Madras Payment of Salaries and Removal of Disqualifications Amendment Act 1952. (17—12—1952) சென்னை அசெம்பிளி சட்ட சபைக்கு கவர்னரால் நியமிக்கக்கூடிய அங்கத்தினருக்கும் இச் சட்டப்படி சம்பளம் உண்டென்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

9. சென்னை சர்க்கரை ஆலைக்கட்டுப்பாடு சட்டத் திருத்தம். Madras Sugar Factories Control Amendment Act — 1952, (17—12—1952) 1949-ஆம் வருடத்திய 20-வது சட்டமாகிய சென்னை சர்க்கரை ஆலைக் கட்டுப்பாடு சட்ட ஷரத்துக்களில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. செக்ஷன் 11A என்று ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது இச்சட்டப்படி சர்க்கரை ஆலைகளுக்குத்தான் கரும்பை விற்க வேண்டுமென்று ஒதுக்கப்பட்ட பிரதேசங்களிலும்கூட (Reserved area) 5 ஏகருக்கு மேற்படாமல் அப்பிரதேசத்தில் கரும்புப் பயிர் செய்பவர் அக்கரும்பைத் தாமே அடித்து வெல்லம் காய்ச்சினாலும் காய்ச்சலாம்; அல்லது அப்படி காய்ச்சுவதற்காக வேறு ஒருவரிடம் விற்றாலும் விற்கலாம் என்று திருத்தப் பட்டிருக்கிறது. ‘பயிர் செய்பவர்’ (Grower) என்றால், ஒருவர் நேரிலோ, ஆட்களைக் கொண்டோ, குடும்பத்தினரைக் கொண்டோ, குத்தகை தாரைக் கொண்டோ பயிர் செய்பவர்’—என்றும் அதில் ஒரு கூட்டுறவு சங்கமும் அடங்குமென்றும் ஒரு விளக்கம் சேர்க்கப் பட்டிருக்கிறது. ‘சாகுபடி பருவ காலம்’ (Planting season) என்பது சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும். அதற்குள் ரிசர்வ் பிரதேசத்தி லிருக்கும் கரும்பு பயிர் செய்பவர் விதிகளால் ஏற்படுத்தப்படும் நமூனாப் படிக்கும் குறிப்பிட்ட தேதிக்குள்ளும் தாம் எவ்வளவு கரும்பு சப்ளை செய்ய முடியும் என்பதை ஆலைக்காரருக்குத் தெரிவிக்க வேண்டும்; ஆனால் கரும்புக் கமிஷனர் அல்லது இன்ஸ்பெக்டரால் குறிப்பிடப்படும் அளவுக்கு மேற்படாமல் இது இருக்க வேண்டுமென்று செக்ஷன் 10(1) திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

10. சென்னை சர்வே, நான்கெல்லைச் சட்டத் திருத்தம். Madras Survey and Boundaries Amendment Act 1952. (17-12-1952) சென்னைச் சர்வே சட்டப்படி சர்வே நடத்தப்படும் ஸ்தலங்களின் எல்லைகளைப் பற்றி சர்வே ஆபீசர் நிர்ணயம் செய்வார். அதற்கான செலவுகளையும் யார் யார் கொடுக்க வேண்டுமென்றும் அவர் நிர்ணயம் செய்வார். இவ்விரண்டு விஷயங்களிலும் ஏற்படும் உத்தரவுகளால் பாதிக்கப்படுபவர் மேல் அதிகாரிக்கு அப்பீல் செய்யலாம். அப்பீல்கள் முடிந்த பிறகுதான் சர்வே முடிவான விஷயம் கெஜட்டில் பிரசுரமாகும். சிவில் வியாஜ்யங்களில் ஏற்படும் தீர்ப்பினால் சர்வே ஆபீசர் அல்லது அப்பீல் அதிகாரியின் உத்தரவுகள் மாற்றப் பட்டாலொழிய, அவையே முடிவானவை. செலவு தொகைகள் விஷயமாய் அப்பீல் நடந்தாலும் அது முடிவடையும்வரை சர்வே நடவடிக்கைகளை முடிவாக கெஜட்டில் பிரசுரம் செய்ய முடியாமல் இது வரை இருந்தது. இப்போது இந்த இடம் திருத்தப் பட்டிருக்கிறது. அதாவது இனி பாத்தியா பாத்தியங்களைப் பற்றி அப்பீல் இருந்தால்தான் அது முடிவடையும் வரை முடிவான கெஜட் பிரசுரம் ஏற்படாது. சர்வே செலவுகளை யார் யார் பொருப்பது என்பதைப் பற்றி அப்பீல் இருந்தாலும், சர்வே முடிவாக நிர்ணயிக்கப் பட்ட விஷயமானது கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட இனி அது ஒரு தடை ஆகாது என்று அச்சட்ட வாசகங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன.

11. பலான சட்ட ரத்தும் திருத்தமும். Madras Repealing and Amending Act-1952 (17—12—1952). இனி உபயோகமில்லாத சட்டங்களை இச்சட்டம் ரத்து செய்வதுடன் சில சட்ட ஷரத்துக்கள் திருத்தவும் பட்டிருக்கின்றன. சில திருத்தச் சட்டங்கள் ரத்து செய்யப் பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவைகளால் திருத்தப் பட்ட வாசகங்கள் எல்லாம் அந்தந்த தாய்ச் சட்டங்களில் புகுந்து விட்டதால் திருத்தச் சட்டம் இனி வேண்டியதில்லை. திருத்தச் சட்டம் ரத்தானாலும் தாய்ச் சட்டங்களுக்குள் புகுந்து விட்ட புதிய வாசகங்களும் ஷரத்துக்களும் அவைகளுடன் ஒட்டிக் கொண்டேதான் இருக்குமென்று சென்னை பொதுச் சட்ட ஷரத்து வியாக்கியானச் சட்டத்தில் (Madras General Clauses Act 1891) இருக்கிறது. திருத்தச் சட்டங்களை இரண்டு வருடங்கள் கழித்து ரத்து செய்வதே வழக்கமாக இருக்கிறது. அதை அனுசரித்து இச் சட்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஷாப் சட்டமானது மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் உண்டென்று அச்சட்டத்தில் இருக்கிறது. இப்போது பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு என்று பிரிக்கப் பட்டிருக்கிறபடியால், முதல் வகுப்பு பஞ்சாயத்துக்களுக்கும் ஷாப் சட்டம் உண்டு என்று

ஷாப் சட்டத்தின் வாசகம் திருத்தப்பட்டிருக்கிறது.

12. சென்னை கிறிஸ்தவ விவாகச் செலாவணிச் சட்டம். Madras Christian Marriages Validation Act 1952 (17-12-1952) செங்கல்பட்டு ஜில்லாவில் திரு பொன்னரங்கம் என்பவரும் நெல்லூர் ஜில்லாவில் திரு தேவதாஸ் என்பவரும் கிறிஸ்தவ விவாகங்களை அவர்கள் பதிவு செய்யலாம் என்று சர்க்காரால் அவர்களுக்கு இந்திய கிறிஸ்தவச் சட்டப்படி கொடுக்கப்பட்ட லைசென்சுகள் ரத்து செய்யப்பட்ட விஷயம் தெரியாமல் இவர்கள் சில கிறிஸ்தவ விவாகங்களைப் பதிவு செய்திருப்பதால், அவ்விவாகங்கள் எல்லாம் சட்ட பூர்வமானவைதான் என்று பிரகடனம் செய்யும் சட்டம்.

13. சென்னை அத்தியாவசியப் பண்டங்கள் கட்டுப்பாடு தாற்காலிகச் சட்டத் திருத்தம் Madras Essential Articles Control and Requisitioning Temporary Powers Amendment Act (24-12-1952) சிற்சில பண்டங்களின் உற்பத்தி சப்ளை விநியோகம் இவைகளைக் கட்டுப்படுத்த சென்னை சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கும் இச்சட்டம் 31-12-1952 உடன் அமுல் இழந்து விடும்படி இருந்தது. இப்பொழுது இது 25-1-1955 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இத்திருத்தச் சட்டத்தால் எடுக்கப் பட்டு விட்டது. இச்சட்டத்தால் கட்டுப்பட்ட சில பண்டங்களும் சட்டத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளன. சாயம், செயற்கை பட்டுநூல், மோட்டார் வண்டிகள் இவைகள் சம்பந்தமாக இனி சென்னை சர்க்கார் எவ்வித கட்டுப்பாடு உத்தரவும் பிறப்பிக்க முடியாது.

1952–ஆம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டம்.

தஞ்சை சாகுபடிதார்-பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

சென்னை சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட இச்சட்டம் 21-12-1952ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று, 24-12-52 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 24-12-1952 முதல் முன்பு இருந்த அவசரச் சட்டம் ரத்தாகி இச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. 23–8–1952ல் சென்னை கவர்னர் அவர்கள் பிரகடனம் செய்த 4ஆவது அவசரச் சட்டம் 5—9—1952ல் பிரகடனம் செய்யப்பட்ட 5ஆவது அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டது. பிறகு இவற்றை ரத்துசெய்து ஜனாதிபதி அவர்களின் அனுமதியின் பேரில் 1—10—1952ல் கவர்னர் அவர்கள் அதே ஷரத்துக்களைக் கொண்ட 6ஆவது அவசரச் சட்டத்தை பிரகடனம் செய்தார்கள். இப்போது மேற் கண்ட 6வது அவசரச் சட்டத்தை ரத்து செய்து சென்னை சட்ட சபையானது இச்சட்டத்தை இயற்றி இருக்கின்றது. சட்ட சபையால் இயற்றப் பட்ட இச்சட்டம், அவசரச் சட்டத்தைப் போல் தாற்காலிகச் சட்டமல்ல. இது நிரந்தரமான சட்டம். முன்பு இருந்த அவசரச் சட்டத்தின் ஷரத்துக்கள் எல்லாம் 1952 செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் இதழ்களில் விளக்கப் பட்டன. அவசரச் சட்டத்தில் இருந்த ஷரத்துக்கள்தான் பெரும்பான்மையாக இச்சட்டத்திலும் இருக்கிறபடியால், இச்சட்டத்தால் ஏற்பட்ட மாறுதல்கள் மட்டில் கீழே விளக்கப் பட்டிருக்கின்றன.

இச்சட்டமும் 23-8-1952 முதலே அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்.

முன்பு அவசரச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்ட தேதியாகிய 23—8—1952 முதலே இச்சட்டம் தஞ்சை ஜில்லாவில் அமுலுக்கு வந்து விட்டதாக இச்சட்டத்தின் செக்ஷன் 1ல் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நடுமனிதர்கள் குறிப்பாக விலக்கப்பட்டனர்.

இச்சட்டத்தில் சாகுபடிதார் அல்லது குத்தகைதார் (Cultivating tenant)

என்பது யாரைக் குறிக்கும் என்று அர்த்தம் சொல்லும் இடத்தில்—வேறு ஒருவருடைய நிலத்தை சாகுபடி அல்லது குத்தகைக்கு ஒப்புக் கொண்டு, அந்நிலங்களை தம்முடையவோ, தம் குடும்பத்தினருடையவோ சரீர உழைப்பையும் (Physical labour) சேர்த்துக்கொண்டு நிலத்தை சாகுபடி செய்பவர்களும் அவர்களுடைய வார்சுகளும்தான் இச்சட்டப்படி சாகுபடிதார்கள் அல்லது குத்தகைதார்களாவார்களென்றும், ஆனால் நடு மனிதர்களும் அவருடைய வார்சுகளும் இதில் சேர்ந்தவர்களல்ல என்றும் வியக்தமாக இச்சட்டத்தின் செக்ஷன் 2(d)ல் விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது வேறு ஒருவருடைய நிலங்களை குத்தகை அல்லது சாகுபடிக்கு ஒப்புக்கொண்டு தாமோ தம் குடும்பத்தினரோ நிலத்தில் இறங்காமல் சாகுபடி வேலைகளை மேன்பார்வையாக நடத்துபவர்களுக்கு இச்சட்டம் யாதொரு சலுகையும் அளிக்கவில்லை என்பது முன்பு இருந்ததைவிட இப்போது வியக்தமாக்கப்பட்டுள்ளது.

1-12-1951 லோ அல்லது 1950-51 விவசாய வருடத்திலோ நிலத்தை சாகுபடி செய்தவர்கள் நிலம் திரும்பக்கிடைக்க மனுப்போட கெடு நீடிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்டவர்கள் தங்களுக்கு நிலம் திரும்பவும் சுவாதீனமாக வேண்டுமென்று 23-8-1952 தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சமரச அதிகாரிக்கு மனுப்போட வேண்டுமென்றும், அக் கெடுவுக்குள் மனுப்போடாதவர்களும் சரி, ஏற்கனவே ஒரு மாத கெடுவுக்குப் பின்பு மனுப்போட்ட காரணத்தினால் மனு தள்ளுபடி செய்யப்பட்டவர்களும் சரி, மறுபடியும் மனுப்போட்டு, தாங்கள் கெடுவுக்குள் மனுப்போடாமலிருந்ததற்குப் போதுமான காரணங்கள் இருந்தன என்று சமரச அதிகாரிக்குத் திருப்திகரமாக ருசுப்பித்தால், அவர்களுடைய மனுக்களை ஏற்றுக்கொண்டு விசாரணை செய்ய இச்சட்டத்தால் சமரச அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. செக்ஷன் 6 (3).

ஒரு வருடத்திய பழைய பாக்கிக்கு மேல் கொடுக்கும்படி உத்தரவு செய்யக் கூடாது.

மேற்கண்டபடி மனுப்போடுகிறவர்கள் கொடுக்கவேண்டிய பழைய குத்தகை அல்லது வார பாக்கி ஜாடாவையும் கொடுத்தால்தான் அவர்கள் நிலத்தை திரும்ப அடையக் கூடும் என்ற நிபந்தனை போட்டு உத்தரவு செய்ய அவசரச் சட்டத்தில் சமரச அதிகாரிக்கு அதிகாரம் இருந்தது. இச்சட்டத்தில், அவ்வதிகாரி செய்யும் அவ்வித உத்தரவில், ஒரு வருட பழைய பாக்கிக்குமேற்பட்ட தொகையைக் கொடுக்கும்படி நிபந்தனை ஏற்படுத்தக் கூடாதென்று கண்டிருக்கிறது. இதற்கு மாறாக அதிக பாக்கியைக் கொடுக்கவேண்டுமென்று சமரச அதிகாரியோ ரிவின்யூ கோர்ட்டோ இச்சட்டத்திற்கு முன் உத்திரவு செய்திருந்தாலும் அந்த நிபந்தனையை இச்சட்டத்திற் கேற்றவாறு மாற்றவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு மனுப்போடலாம். ஆனால் இச்சட்டம் பிரசுரம் செய்யப்பட்ட தேதியாகிய 24–12–1952க்கு முன்பே கொடுக்கப்பட்டு விட்ட பழைய பாக்கிகளை நிலக்காரர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரமில்லை.

அப்பீல் கெடு 30 நாள்

சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு நிலம் திருப்பிக் கொடுக்கப்படவேண்டுமென்று போடப்படும் மனுவின் உத்தரவின் பேரில் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு அப்பீல் செய்பவர்கள் சமரச அதிகாரியின் உத்தரவுத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அப்பீல் செய்யலாம். கெடுவுக்குப் பிறகு தாகல் செய்யப் படும் அப்பீல்களிலும் விசேஷ சந்தர்ப்பங்கள் இருந்தால் தாமதத்தை மன்னித்து அப்பீலை ஏற்றுக் கொள்ள ரிவின்யூ கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு.—செக்ஷன் 6

என்ன பயிர் சாகுபடி செய்யவேண்டுமென்று நிலத்தின் சொந்தக்காரரே நிர்ணயம் செய்யலாம்.

வார சாகுபடிகளிலும் சரி, நிலத்தின் சொந்தக்காரரும் குத்தகைதாரும் ஒப்புக் கொண்டாலும் சரி, நிலத்தில் எவ்வித

மான பயிர்கள் சாகுபடி செய்யவேண்டுமென்பதை நிர்ணயம் செய்ய நிலத்தின் சொந்தக்காரருக்குத் தான் உரிமை—செக்ஷன் 7 (a). ஆனால் நெல் சாகுபடி செய்யப்படும் நிலங்களில் நன்செய் பயிர்கள் இல்லாத காலங்களில் போடக் கூடிய பயறு உளுந்து போன்ற இடைக்காலப் பயிரைப்பற்றி கீழேவரும் ஷரத்துக்குட் பட்டுத்தான் நிலக்காரருக்கு இவ்வுரிமை.

எரு—பற்றிய ஷரத்துக்கள் மாறுதல்.

அவசரச் சட்டத்தில் நிலத்திற்கு எருப் போடும் செலவு சாகுபடிதார் அல்லது குத்தகை தாருடைய தனிப் பொருப்பாக இருந்தது. இச்சட்டத்தில் இது மாற்றப் பட்டிருக்கிறது. அதாவது, இயற்கை எருவின் செலவுகள் ஜாடாவையும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாரே தான் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் ரசாயன எருவோ (Chemical fertilizers) செயற்கை எருவோ (artificial manure) கடலைப் புண்ணுக்கோ உபயோகிக்கப்பட்டால் அதன் செலவை இருவரும் பொருத்துக் கொள்ளவேண்டும். அதாவது மகசூலை எந்த வீதாசாரப்படி அவர்கள் பிரித்துக் கொள்ள வேண்டுமோ அந்த வீதாசாரப்படி நிலக்காரர் 5ல் 3 பங்கும் சாகுபடி அல்லது குத்தகைதார் 5ல் 2 பங்கும் மேற்கண்ட எருவின் செலவைப் பொருத்துக் கொள்ள வேண்டும்.

எரு அல்லது விதைக்காக நிலத்தின் சொந்தக்காரர் கொடுக்கும் முன் தொகைகளை சாகுபடிதார் அல்லது குத்தகை தாருடைய மகசூல் வீதத்திலிருந்தே வசூல் செய்து கொள்ளலாம்.

சாகுபடி செய்வதற்காக நிலத்தின் சொந்தக்காரர் விதைக்காகவோ, எருவுக்காகவோ ஏதாவது கொடுத்திருந்தால் அவருக்குக் கிடைக்கவேண்டிய விதையின் கிரயத்திற்கும், எருவில் சாகுபடிதார் அல்லது குத்தகைதார் பொருத்துக் கொள்ள வேண்டிய வீதா சாரத் தொகைக்கும் சாகுபடிதாருடைய மகசூல் வீதமானது ஒரு ஜாமீனாகும். இதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகைக்குச் சம மதிப்புள்ள தானியத்தை சாகுபடிதார் அல்லது குத்தகைதார் தம் வீதத்திலிருந்து களத்து மேட்டிலேயே நிலக்காரருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

இடைக்காலப் பயிர்-பயறு, உளுந்து போன்றவை.

நிலத்தில் நெல்பயிர் செய்யும் காலம் முடிந்து, நன்செய்ப் பயிர்களுக்கான வேலைகள் எதுவும் செய்ய முடியாமலிருக்கும் காலத்தில் சாகுபடிதாரோ குத்தகைதாரோ தம்முடைய இஷ்டப் படிக்கான வழக்கமான இடைக்காலப் பயிர்களை தம்முடைய பொருப்பிலும் செலவிலும் போடலாம். ஆனால் எவ்வளவு விஸ்தீர்ணத்தில் இவ்வித இடைக்காலப் பயிர் உற்பத்தி செய்யப் படுகிறதோ அதற்கு குறையாத விஸ்தீர்ணமுள்ள நிலத்தில் பசுந்தாள் உரத்திற்கான பயிர்களையும் அவர் சாகுபடி செய்ய வேண்டும்; அல்லது சர்க்காரால் குறிப்பிடப்படும் விஸ்தீர்ணத்தில் இப்பயிரை எழுப்பவேண்டும். இடைக்காலப் பயிரின் மகசூலில் சாகுபடி அறுவடை செலவுகள் போக பாக்கி இருக்கும் நிகர மகசூலில் 5ல் 1 பங்கை நிலத்தின் சொந்தக்காரருக்கு கொடுக்க வேண்டும்-செக்ஷன் 8 (4).

குத்தகைச் சீட்டு எழுதிக் கொள்ளுவது.

ஒவ்வொரு சாகுபடி அல்லது குத்தகை ஏற்பாட்டைப் பற்றியும் ஒரு நியாயமான கெடுவுக்குள் குத்தகைப் பத்திரம் எழுதிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஏற்பாட்டுக்கும் நமூனப்படி மூன்று அசல் குத்தகைப் பத்திரங்கள் எழுதப்படவேண்டும். இம்மூன்று பிரதிகளிலும் நிலத்தின் சொந்தக்காரரோ அவருடைய ஏஜண்டோ, அவரும், சாகுபடி அல்லது குத்தகைதாரும் -- இருவரும் கையெழுத்து செய்ய வேண்டும். நிலக்காரர் இதில் ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும்; சாகுபடிதார் அல்லது குத்தகைதார் ஒரு பிரதி வைத்துக் கொள்ள வேண்டும். மற்றொன்றை நிலக்காரரோ அவருடைய ஏஜண்டோ, சாகுபடிதார் அல்லது

குத்தகைதார் கையெழுத்துப் போட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள், தாலூக்கா ஆபீசுக்கு அனுப்பவேண்டும். இவற்றில் யார் கையெழுத்துப் போட மறுத்தாலும் தாமதம் செய்தாலும், மற்றவர் இதன் பிரதியை தாலூக்காவுக்கு அனுப்பிவிடலாம். அத்துடன் 'மற்றவர் கையெழுத்துப் போட மறுக்கிறார் அல்லது தாமதம் செய்கிறார்' என்று ஒரு உறுதி மொழியுடன் இதை அனுப்பவேண்டும். இக் குத்தகைப் பத்திரத்திற்கு ஸ்டாம்பு ஒன்றுமில்லை. (குத்தகைச் சீட்டு நமூனா 4ன்படி இருக்க வேண்டும்—கீழே இது பற்றிய புதிய விதியைப் பார்க்கவும்.) இவ்விதம் குத்தகைச் சீட்டில் கையெழுத்துப் போடவோ, தாலூக்காவுக்கு அனுப்பவோ யார் தவறினாலும் அவருக்கு ரூ. 50 வரை அபராதம் விதிக்க ரிவின்யூ கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு—செக்ஷன்-9.

சாகுபடி அல்லது குத்தகைதார்களை அகற்றுவதற்கான காரணங்கள்

(a) சாகுபடிதார்கள் நிலக்காரருக்குக் கொடுக்க வேண்டிய பாகத்தைக் களத்து மேட்டிலேயே பிரித்துக் கொடுக்கா விட்டாலும், எரு விதை இவைகளுக்கான கிரயத்திற்குச் சரியான மதிப்புள்ள தானியத்தை முன் சொல்லப்பட்டபடி களத்து மேட்டிலேயே கொடுக்கவிட்டாலும் (b) குத்தகைதார்கள் குத்தகை கொடுக்க வேண்டியதாக குத்தகைப் பத்திரத்தில் கண்டிருக்கும் கெடுவிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளோ, குத்தகைப் பத்திரம் இல்லாவிட்டால், கிராம வழக்கப்படி குத்தகை கொடுக்க வேண்டிய கெடுவிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளோ குத்தகை அளக்காவிட்டாலும்; (c) அலட்சியத்தால் நிலத்திற்கோ மகசூலுக்கோ கெடுதி அல்லது நஷ்டம் விளைவித்தாலும் அலலது நிலத்தை சாகுபடி செய்வதையே நிறுத்திவிட்டாலும் (d) எதற்காக நிலம் சாகுபடி அல்லது குத்தகைக்கு விடப்பட்டதோ அதற்கு மாறாக நிலத்தை உபயோகித்தாலும் (e) உள் குத்தகைக்கு விட்டாலும், (f) சரியான சாகுபடியை உத்தேசித்து அவர் நிலத்தை வைத்துக்கொண்டிருப்பது சரி அல்ல என்று தோன்றும்படி அவர் நடந்துகொண்டாலும் (g) சமரச அதிகாரியாலோ, ரிவின்யூ கோர்ட்டாலோ உத்தரவு செய்யப்பட்ட நிபந்தனைகளின் படி அவர் நடக்கத் தவறினாலும் அவ்வித குத்தகைதார் அல்லது சாகுபடி தாரை அகற்ற நிலக்காரர் ரிவின்யூ கோர்ட்டுக்கு மனுப்போடலாம்—செக்ஷன் 10.

குத்தகை பாக்கி உள்ளவர்களுக்கு 30 நாள் அவகாசம் கொடுத்து அதற்குள் பாக்கியைக் கொடுக்காவிட்டால் தான் அவ்வித குத்தகைதார்களை ரிவின்யூ கோர்ட்டார் அகற்றலாம்.

பண்ணையாட்களை அகற்றுவது பற்றி

பண்ணையாள் அகற்றப்பட்டது நியாயமான காரணங்களினால் அல்ல என்று சமரச அதிகாரிக்குத் தோன்றினால் பண்ணையாளைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி அவர் உத்தரவு செய்யலாம். அவ்விதம் செய்யாத நிலக்காரர்கள் பண்ணையாளுக்கு என்ன தொகை நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்பதை யுக்தம்போல் நிர்ணயம் செய்ய ரிவின்யூ கோர்டுக்கு அதிகாரம் உண்டு. செக்ஷன் 12 (4)

நோட்டீசு கொடுத்தும் பண்ணையாளை அகற்றலாம்.

நிலத்தின் சொந்தக்காரர் பண்ணையாளுக்கு அடுத்த விவசாய வருடத்துடன் முடிவடையும்படி ஒரு வருட அவகாசம் கொடுத்து நோட்டீசு கொடுத்து, பண்ணையாளை அகற்றலாம். பண்ணையாளும் மேற்கண்டபடி நோட்டீசு கொடுத்து வேலையிலிருந்து நின்று கொள்ளலாம். இருவரும் ஒப்புக்கொண்டால் மேற்கண்டபடி நோட்டீசே வேண்டியதில்லை. இதன்படி நோட்டீசு கொடுத்து பண்ணையாளை அகற்றினால், அப்பண்ணையாளுக்கு ஆறு மாதக் கூலி, தானியமாகவோ, ரொக்கமாகவோ கொடுக்கப்படவேண்டும், இவ் விஷயத்திலும் இருவரும் சம்மதித்து அதன்படி பண்ணையாள் தொகையோ

தானியமோ அடைவதும் அனுமதிக்கப் படுகின்றது—செக்ஷன் 12 (6).

பண்ணையாளை அகற்றுவது பற்றி நிலத்தின் சொந்தக்காரருக்கு எப்படியோ, அப்படியேதான், பண்ணையாட்களை அமர்த்திக் கொண்டிருக்கும் குத்தகைதார்களுக்கும் சாகுபடிதார்களுக்கும்—செக்ஷன் 12 (7).

சச்சரவுகளைத் தீர்ப்பது

நிலத்தின் சொந்தக்காரருக்கும் சாகுபடிதார் அல்லது குத்தகைதார் களுக்குமிடையேயோ இவர்களுக்கும் பண்ணையாட்களுக்குமிடையேயோ சாகுபடி சம்பந்தமாகவோ, ஒப்பந்த சம்பந்தமாகவோ, குத்தகை அல்லது கூலி சம்பந்தமாகவோ எவ்வித சண்டை சச்சரவு ஏற்பட்டாலும் அதைப்பற்றி முதலில் சமரச அதிகாரிக்கு மனுப் போடலாம். மனுவுக்கு ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும். சமரச அதிகாரி செய்யும் உத்தரவின் பேரில் 30 நாட்களுக்குள் ரிவின்யூ கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். தகுந்த காரணமிருந்தால் 30 நாட்களுக்குப் பின்பு தாக்கல் செய்யப்படும் அப்பீல்களையும் ஏற்றுக் கொள்ளலாம் அப்பீல் மனுவுக்கும் ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்டவேண்டும்.

குத்தகை வஜா கேட்க மனு.

குத்தகைதார்கள் சம்பந்தப்பட்டவரையில், அவர்களால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் எந்தவருடத்திலாவது மகசூல் பூராவுமோ ஒரு பாகமோ விளையாமல் போய்விட்டால், அவர் கொடுக்கவேண்டிய குத்தகை பூராவையுமோ அதன் ஒரு பாகத்தையோ வஜா செய்ய வேண்டுமென்று குத்தகைதார் சமரச அதிகாரிக்கு மனுப்போடலாம். இம் மனுவுக்கும் ஸ்டாம்பு ரூபாய் ஒன்று ஒட்டவேண்டும். சமசர அதிகாரி விசாரணை செய்து யுக்தமான வஜா செய்யலாம். அவருடைய உத்தரவின் பேரில் 30 நாட்களுக்குள் ரிவின்யூ கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். தகுந்த காரணங்கள் இருந்தால் 30 நாட்களுக்குப் பின் தாக்கல் செய்யப்படும் அப்பீலையும் ஏற்றுக்கொள்ள ரிவின்யூ கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. அப்பீல் மனுவுக்கும் ஸ்டாம்பு ரூபாய் ஒன்று தான்—செக்ஷன் 13.

முடிந்த மனுக்களும் 'பெண்டிங்'கில் இருக்கும் மனுக்களும்.

ஏற்கனவே ரிவின்யூ கோர்ட்டால் முடிவு செய்யப்பட்ட விஷயங்களை புதிய ஷரத்துக்கள் பாதிக்கமாட்டா. மேலும் தகராறுகளைப்பற்றி அவசரச் சட்டப்படி ரிவின்யூ கோர்ட்டில் முடிவடையாமல் பெண்டிங்கில் இருக்கும் மனுக்கள் 24-12-1952ல் சமரச அதிகாரிக்கு மாற்றப் படும். இச்சட்டப்படி அவர்தான் முதலில் முடிவு செய்வார்.

முன்புள்ள விதிகள், தீர்ப்புகள்

அவசரச் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட விதிகள், தீர்ப்புகள் நடவடிக்கைகள் எல்லாம் இச்சட்டத்தை அனுசரித்து ஏற்பட்டதுபோல் செல்லும்.

குத்தகை சீட்டு பற்றிய தஞ்சைச் சட்ட புதிய விதிகள்

23-2-1953-க்குள் புதிய குத்தகைச் சீட்டு நமூனு 4-ன் படி. எழுதிக் கொள்ள வேண்டும். முன்பு எழுதியவர்களும் கூட மறுபடியும் எழுத வேண்டும்.

புதிய தஞ்சைச் சட்டத்தை அனுசரித்து சென்னை சர்க்கார் பழைய விதிகளை ரத்து செய்து புதிய விதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர். (27-12-1952 கெஜட் விசேஷ வெளியீடு.) அநேகமாக பழைய விதிகள் தான் சில வார்த்தை மாறுதல்களுடன் இருக்கின்றன. குத்தகைச் சீட்டு எழுதுவதைப் பற்றிய புதிய விதி 10 பின் வருமாறு:—

விதி 10. ஒவ்வொரு சாகுபடி ஏற்பாட்டுக்கும் அது குத்தகையாக இருந்தாலும் சரி, வார சாகுபடியாக இருந்தாலும் சரி, இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதி (அதாவது 24-12-1952) க்கு முன் அது சம்பந்தமாய் ஒரு குத்தகைச் சீட்டு எழுதப் பட்டிருந்தாலும் சரி, எழுதப்படாமலிருந்தாலும் சரி, 23-2-1953 க்கு முன்னதாக நமூனு 4-ன் படி ஒரு குத்தகைப் பத்திரம் எழுதப் படவேண்டும். இக்கெடுவை குறிப்பிட்ட நபர் சம்பந்தமாகவோ குறிப்பிட்ட வகை சம்பந்தமாகவோ நீடிக்க சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. மறுபடியும் எந்த விவசாய வருடத்திற்காவது புதிய குத்தகைப்பத்திரம் எழுதிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அது ஆகஸ்டு மாதம் முதல் தேதிக்கு முன்பே எழுதிக் கொள்ள வேண்டும்.

(குத்தகைச் சீட்டுகள் மூன்று பிரதிகள் எழுதப்பட வேண்டும். ஒவ்வென்றிலும் நிலத்தின் சொந்தக்காரர் அல்லது ஏஜண்டும், சாகுபடிதார் அல்லது குத்தகைதாரும் கையெழுத்துப் போட வேண்டும்-என்று புதிய சட்ட ஷரத்துக்களிலேயே இருப்பதை கவனிக்கவும்.)

நமூனா 4.

(விதி 10 பார்க்கவும்)

குத்தகைப் பத்திரம்

[1952-ம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார்-பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 9-ன் படி.]

195 வருடம்..........மாதம்........தேதி (1) நிலச்சுவான்தாராகிய......................
தாலூக்கா..கிராமத்தில் இருக்கும்
....ம்
(2) குத்தகைதாராகிய...............தாலூக்கா..............கிராமத்தில் இருக்கும்
....ம்
எழுதிக்கொண்ட குத்தகைப் பத்திரம் என்னவென்றால்:—

மேலே கண்ட நிலச்சுதான்தார் இதனடியில் ஷிடியூலில் கண்டிருக்கும் நிலங்களை சாகுபடி செய்வதற்காக மேலே கண்ட குத்தகைதாருக்கு...........விவசாய வருட ஆரம்பத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு இதன் மூலம் குத்தகைக்கு விட்டிருக்கிறார். 1952ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டமாகிய தஞ்சை சாகுபடிதார்—பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், அதன் கீழ் ஏற்படும் விதிகள், உத்தரவுகள் அறிக்கைகள் இவைகளுக்குட்பட்டு, மேலேகண்ட நிலச்சுவான்தாரரும் குத்தகைதாரும் அடியில் கண்டபடி ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதாவது;—

(1) குத்தகைதார் கொடுக்க வேண்டிய குத்தகை — அருவடை போரடிச் செலவுகள் போக பாக்கி இருக்கும் சாதாரண மொத்த மகசூலில் *$\frac{3}{5}$ பங்குக்கான நெல் கலம்........(எழுத்தால்)............

(2) நெல் அளக்க வேண்டிய தேதியும் அளவும். — குருவை—ஒவ்வொரு வருடமும் நவம்பர் 15 தேதிக்குள் குருவை நெல் கலம்....(எழுத்தால்)......அளக்க வேண்டியது.

சம்பா—ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 15 தேதிக்குள் சம்பா நெல் கலம்....(எழுத்தால்)......அளக்க வேண்டியது.

குறிப்பு—இப்போது குருவை சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலத்தை தவிர அதிகமான விஸ்தீர்ணத்தில் சம்பா நிலங்களில் குருவை சாகுபடி செய்யப்பட்டால், அதிகமகசூலில் $\frac{3}{5}$ பங்கு நிலச்சுவான்தாருக்கு அளக்கப்படவேண்டும்.

(3) மகசூல் பிரித்துக் கொள்ளப்பட வேண்டிய இடமும் அளவு மரக்காலும். — வழக்கமாக உள்ள களத்துமேட்டில் சர்க்கார் முத்திரை மரக்காலால் நெல் அளக்கப்படவேண்டும்.

(4) சட்டத்திற்கு முரணாக அல்லாத மற்ற ஷரத்துக்கள். —
(a)
(b)
(c)

ஷிடியூல்

ஜில்லா	தாலூக்கா	கிராமம்	சர்வே நம்பரும் லெட்டரும்	நிலத்தின் பெயர்	விஸ்தீர்ணம் வேலி. மா. குழி ஏகர். சென்டு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

(1) சம்பா நிலங்கள்
(2) குருவை நிலங்கள்

இந்தப்படி சம்மதித்து இக்குத்தகைப் பத்திரம் எழுதிக் கொண்டோம்.

நிலச்சுவான்தார்
.................கையெழுத்து..
நிலச்சுவான்தார் ஏஜெண்டின்

குத்தகைதார் கையெழுத்து..
சாட்சிகள் கையெழுத்து..

*அல்லது குறைவான பாகம் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால் அதை எழுதவும்.

வாரசாகுபடிப் பத்திரம்

[1952-ம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார்—பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தின் செக்ஷன் 9-ன்படி.]

195 வருடம்........மாதம்......தேதி (1) நிலச்சுவான்தாராகிய.............. தாலூக்கா..கிராமத்தில் இருக்கும் ....ம்
(2) வாரசாகுபடிதாராகிய...........................தாலூக்கா.....................கிராமத்தில் இருக்கும் ....ம்

எழுதிக்கொண்ட வார சாகுபடிப் பத்திரம் என்னவென்றால் :—

மேலே கண்ட நிலச்சுவான்தார் இதனடியில் ஷிடியூலில் கண்டிருக்கும் நிலங்களை சாகுபடி செய்வதற்காக மேலே கண்ட வாரசாகுபடிதாருக்கு.......விவசாய வருட ஆரம்பத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு இதன் மூலம் வாரசாகுபடிக்கு விட்டிருக்கிறார். 1952ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டமாகிய தஞ்சை சாகுபடிதார் - பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், அதன் கீழ் ஏற்படும் விதிகள், உத்தரவுகள் அறிக்கைகள் இவைகளுக்குட்பட்டு, மேலே கண்ட நிலச்சுவான்தாரரும் வாரசாகுபடிதாரரும் அடியில் கண்டபடி ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதாவது:—

(1) வாரசாகுபடிதார் அளக்க வேண்டிய மகசூல் பாகம்.	அருவடை போரடிச் செலவுகள் போக பாக்கி இருக்கும் மொத்த மகசூலில் * $\frac{3}{8}$ பாகம்
(2) நெல் அளக்கப்பட வேண்டிய தேதி	குருவை ஒவ்வொரு வருடமும் நவம்பர் 15 தேதிக்குள் சம்பா ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 15 தேதிக்குள்.
(3) மகசூல் பிரித்துக் கொள்ளப்பட வேண்டிய இடமும் அளவு மரக்காலும்.	வழக்கமாக உள்ள களத்து மேட்டில் சர்க்கார் முத்திரை மரக்காலால் அளக்கப்பட வேண்டும்.
(4) சட்டத்திற்கு முரணாக அல்லாத மற்ற ஷரத்துக்கள்.	(a) (b) (c)

ஷிடியூல்

ஜில்லா	தாலூக்கா	கிராமம்	சர்வே நம்பரும் லெட்ரும்	நிலத்தின் பெயர்	விஸ்தீர்ணம் வேலி. மா. குழி ஏகர் சென்டு
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

(1) சம்பா நிலங்கள்

(2) குருவை நிலங்கள்

இந்தப்படி சம்மதித்து இந்த வாரசாகுபடிப்பத்திரம் எழுதிக் கொண்டோம்.

நிலச்சுவான்தார்
நிலச்சுவான்தார் ஏஜண்டின் கையெழுத்து ....

வாரசாகுபடிதார் கையெழுத்து..

சாட்சிகள் கையெழுத்து..

* அல்லது குறைவான பாகம் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால் அதை எழுதவும்.

கண்ட்ரோல்

ஜீனி வெல்லக் கட்டுப்பாடு உத்தரவு.

சென்னை சர்க்காரின் 13-12-1952 தேதியுள்ள G. O. Ms. No. 1935-ன்படி மத்திய சர்க்காரின் 30-9-1952 தேதியுள்ள கீழேகண்ட உத்தரவு பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது S. R. O. 1673:—1950ஆம் வருடத்திய ஜீனி வெல்லக் கட்டுப்பாடு உத்தரவின் 6-வது ஷரத்தில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து மத்திய சர்க்கார் கீழே கண்ட உத்தரவுகளை ரத்துசெய்து விட்டனர். ரத்து செய்யப்பட்ட உத்தரவுகளாவன:—(1) 2-12-1950 தேதியுள்ள S. R. O. No. 1000. அதாவது சென்னை முதலிய ராஜ்யங்களில் வெல்லத்தின் உச்ச விலையை நிர்ணயம் செய்யும் உத்தரவு. (2) 6-12-1950. தேதியுள்ள S.R. O. No. 1003. நாட்டுச் சக்கரையின் விலையை நிர்ணயம் செய்யும் உத்தரவு. (3) 13-12-1950 தேதியுள்ள S. R. O. No 1070 பம்பாயில் வெல்ல விலை நிர்ணயம் செய்யும் உத்தரவு. (4) 23-1-1952 தேதியுள்ள S. R.O. No. 101.

S. R.O. 1674:—அத்தியாவசியப் பண்ணங்களின் தாற்காலிக அதிகாரச் சட்டத்தின் 3-ஆவது செக்ஷனில் கண்ட அதிகாரத்தை உபயோகித்து க்யூப் சர்க்கரை விலையை நிர்ணயிக்கும் மத்திய சர்க்காரால் 15-1-1951 தேதியுள்ள S. R. O. No. 65 ரத்து செய்யப்பட்டுள்ளது.

உ

ஸ்ரீ மகாலெக்ஷிமி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீபார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

வாஞ்சூர் K. S. & CO.,

நாகூர் சோகை மருந்து

ஸ்தாபிதம் 1860



இது சோகை, முகம் வயிறு வீக்கங்கள், தீராத பாண்டு, கை கால் குடைத்தல், தொண்டை புகைச்சல், சிராணி போக்கு, நாள்பட்ட ஜுரம், சூதகக்கட்டு, அஜீரணம், மேக நீர், கண்ணில் திடீரென ஏற்படும் மறைவு முதலானவைகளை விரைவில் குணப்படுத்தி ரத்த விருத்தியை உண்டாக்குகிறது.

பலராலும் போற்றப்படுவது.

10 நாள் சாப்பிடக்கூடிய பெட்டி 1-க்கு விலை ரூ. 0—6—0

தயாரிப்பவர்கள்:-

வாஞ்சூர் K. S. & CO.,

49, மணிக்காரத்தெரு, :: கும்பகோணம்.

கல்யாண

பட்டுநூல்

ஜவுளிகளுக்கு

●

ராதா ஸில்க்

எம்போரியம்

●

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.

வெண்சங்கு நறுமண

குணம்

மணம்

சுத்தம்

ஆரோக்கியம்

சிக்கனம்

உடையது.

உரிமை:

S. பெத்தண்ண நாடார்

.. கீழவாசல்—தஞ்சாவூர்..

சீயக்காய்த் தூள்

[இப் பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

கடன் வாங்கியவர் கடனைத் தீர்க்கக் கையாண்ட குறுக்கு வழி. மோசடி செய்த குற்றத்திற்காகத் தண்டனை அடைந்தார்

[ஆதாரம்:—1952 (2) மதராஸ் லா ஜர்னல் 771.]

தாம் வாங்கிய கடனைத் தீர்த்துவிட சுலபமான வழி ஒன்றைக் கண்டு பிடித்து அதை நடைமுறையிலும் கையாண்ட ஒருவர் இவ்வழக்கில் மாட்டிக் கொண்டார். மாஜிஸ்ட்ரேட்டால் தண்டிக்கப்பட்டார். இத்தண்டனை சென்னை ஹைகோர்ட்டாலும் உறுதி செய்யப்பட்டது. இவ்வழக்கில் தண்டனை அடைந்த எதிரி கையாண்ட முறை இதுதான். எதிரி ஒருவருக்கு ரூ. 800க்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்து, கடன் வாங்கி இருந்தார். இது 27-12-1948ல். பிறகு 5-10-1949ல் எதிரி ரூ. 114 வட்டிக்காகக் கொடுத்து அந் நோட்டிலும் இதை 'செல்' எழுதி வரவு வைத்திருந்தார். பிறகு 1950 அக்டோபர் மாதத்தில் எதிரி கொஞ்சம் கொஞ்சமாகக் கடன் கொடுத்தவரிடம் ரூ. 36-8-0 கொடுத்தார். இன்னும் அதிகத் தொகை கொடுக்க வேண்டுமென்று கடன் கொடுத்தவர் கேட்டபோது, அவரை இரண்டு மூன்று நாட்கள் கழித்து, தம் ஊருக்கு வரும்படி எதிரி கேட்டுக் கொண்டார். 15-12-1950ல் கடன் கொடுத்தவர் எதிரியின் கிராமத்திற்குப் போய் அங்கே தம்முடைய சிநேகிதர் ஒருவர் வீட்டிலிருந்து அங்கே வரும்படி எதிரியைக் கேட்டுக்கொண்டார். எதிரி அவ்விதமே அங்கே வந்தார். எதிரியானவர் தம் கையிலிருந்து ரூ. 13-8-0 எடுத்து வைத்து முன் கொடுத்த ரூ. 36-8-0 உடன் இதுவும் சேர்ந்து ரூ. 50 கூடுதலாகிறதென்று சொல்லி, பிராமிசரி நோட்டைத் தம்மிடம் கொடுக்கும்படி கேட்டார். கடன் கொடுத்தவர் பிராமிசரி

நோட்டை எடுத்துத் தம் சிநேகிதரிடம் கொடுத்தார். அவர் அதை, செல் எழுதுவதற்காக எதிரியிடம் கொடுத்து அவர் கொடுத்த ரூ. 13-8-0 சரியாக இருக்கிறதா என்று பணத்தை எண்ணிக்கொண்டிருக்கும் போது எதிரி பிராமிசரி நோட்டில் 'செல்' எழுதி வரவு வைத்தார். பிராமிசரி நோட்டை எதிரி திருப்பக் கொடுத்தவுடன் அவர் அதில் வரவு வைத்திருப்பது ரூ. 50 அல்ல; ரூ. 750 என்பதைக் கவனித்தனர். ஏன் இப்படி எழுதிவிட்டீர்கள் என்று அவர் கேட்கப்பட்டபோது 'என் வீட்டுக்கு வாருங்கள். பாக்கி ஜாடாத் தொகையையும் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்லி, எதிரி தாம் அங்கே வைத்த ரூ. 13-8-0யும் தம் கையிலேயே எடுத்துக் கொண்டு தாம் வந்த சைகிளில் ஏறி வேகமாகப் போய்விட்டார். கடன் கொடுத்தவரும் அவர் நண்பரும் எதிரியைத் துரத்திக்கொண்டே ஓடினார்கள். நடுவில் அவர்கள் சந்தித்த வேறு ஒருவரிடமும் இதைச் சொல்லி அவரும் சேர்ந்து மூவருமாக ஓடி, கடைசியில் ரோடிலிருந்த ஒரு கடையில் எதிரியைப் பிடித்தார்கள். ஏன் இப்படி அவர் செய்தார் என்று புதிய நண்பர் கேட்டதற்கு 'வரவு எழுதப்பட்டிருப்பது சரிதான்' என்று சொல்லி அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார்.

கடன் கொடுத்தவர் இவ் விஷயத்தை உடனேயே போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தார்; ஆனால் இது 'சிவில்' விஷயம் என்று அவர் இவ்வழக்கை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

கடன் கொடுத்தவர் தாமே நேரில் இதைப் பற்றி மாஜிஸ்ட்ரேட்டிடம் 'கம்பிளெயின்ட்' கொடுத்தார். இவ்வழக்கில் எதிரியானவர் தாம் உண்மையில் ரூ. 750 தான் கொடுத்ததாகக் கட்சிசொன்னார். இதை மாஜிஸ்ட்ரேட் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிரி மோசம் செய்ததாகத் தண்டிக்கப் பட்டார்.

எதிரி இத்தீர்ப்பு சரி அல்ல என்றும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் ஹைகோர்ட்டுக்கு மனுச்செய்து கொண்டார். ஹைகோர்ட்டில் எதிரிக்காக ஒரு சட்ட விஷயம் வாதாடப்பட்டது. அதாவது எதிரி பணம் கொடுக்காமல் 'செல்' எழுதி இருந்தாலும் அது ஒரு குற்றமாகாதென்று வாதாடப்பட்டது. அதாவது மோசம் செய்யலாமென்று மனதில் திட்டம் போட்டதைத் தவிர, உண்மையில் எதிரி மோசம் செய்யவுமில்லை, அப்படிச் செய்ய முயற்சி செய்யவுமில்லை என்று தான் இது ஏற்படுமே ஒழிய இது ஒரு குற்றமாகாதென்று வாதாடப்பட்டது.

இக் கட்சியை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதில் ரூ. 750ல் உண்மையில் எதிரி கொடுத்திருந்த ரூ. 36-8-0 போக, பாக்கித் தொகையை 'மோசடி' செய்யவேதான் முயற்சி செய்தார் என்றும் இது ஒரு குற்றமாகு மென்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டு எதிரி அடைந்த தண்டனையானது உறுதி செய்யப்பட்டது.



இவர் திருமணம் செய்துகொண்டது ஒரு ஸ்திரீயுடன் அல்ல.
இது மணமாகுமா!
பம்பாய் ஹைகோர்ட்டில் ருசிகரமான வழக்கு

[ஆதாரம்—1952 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் பம்பாய் 486.]

பம்பாய் ஹைகோர்ட்டில் நடந்த இவ்வழக்கு, கொஞ்சம் விசித்திரமானது. இந்த ஒருவர் 1950 மே மாதத்தில் சாஸ்திரோக்தமாகத் திருமணம் செய்து கொண்டார். பெண்ணுக்கு வயது 16. இவர் 1952 மே மாதத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் தம் மனைவி மீது ஒரு தாவா செய்தார். தம் மனைவிக்குப் பெண் குறியோ (Vagina) கருப் பையோ (uterus) ஒன்றும் கிடையாதென்றும், அவள் ஆண்பெண் உறவு வைத்துக்கொள்ளச் சக்தியற்றவள் என்றும், கலியாணத்திற்கு முன்போ பிறகோ அவள் புட்பவதி யாகவில்லை என்றும், ஆகையால் இத் திருமணமே செல்லாதெனக் கோர்ட்டில் பிரகடனம் செய்யவேண்டு மென்றும் அப்படி இல்லாவிட்டாலும் மனைவிக்கு ஸ்திரீத்தன்மை இல்லாத காரணத்தினால் (impotency) பம்பாய் விவாக ரத்துச் சட்டப்படி இவ் விவா கத்தை ரத்துச் செய்யவேண்டு மென்றும் அவர் அத் தாவாவில் கேட்டிருந்தார்.

மனைவி இவ்விஷயங்களை ஒப்புக்கொண்டாள். ஆனால் ஆப்பரேஷன் செய்வதன் மூலம் தனக்குப் பெண்குறியை ஏற்படுத்திக்கொள்ளலா மென்றும், கருப்பை இனிமேல் தான் வளர்ச்சி யடையுமென்றும் அவள் கட்சி சொன்னாள். ஆண்பெண் உறவு வைத்துக்கொள்வது தாற்காலிகமாகச் சாத்தியமில்லை என்பதும் அவளால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஸ்திரீத் தன்மை இல்லாத இம்மாதுடன் ஒரு ஆண் செய்து கொண்டது 'மணம்' என்று ஆகுமா. அல்லது இது ஒரு 'மணமே' அல்ல என்றும், அதை ரத்துச் செய்ய முடியுமா என்றும் சட்ட பிரச்னை ஏற்பட்டது. திருமணம் என்பது ஒரு சாதாரண ஒப்பந்தமாக இருந்தால் இது திருமணமே அல்ல; இது செல்லாதென்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால் இந்து சாஸ்திரப்படி திருமணம் என்பது வெறும் ஒப்பந்தமல்ல; அது ஒரு புனிதமான 'ஸம்ஸ்காரம்'; ஆகையால் அதை ரத்துச்செய்ய இந்தச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று மனைவிக்காக வாதாடப்பட்டது. இந்தச் சட்டப்படி 'விவாகம்' என்பது ஒரு சம்ஸ்காரமுமாகும்; ஒப்பந்தமுமாகும். ஆகையால் இவ்விதமான திருமணங்கள் ஆதிமுதலே செல்லத்தக்கதில்லை என்று சொல்லவும் சொல்லலாம்; அப்படிச் சொல்ல முடியாவிட்டாலும் பம்பாய் விவாக ரத்துச் சட்டப்படி இவ்விவாகத்தை ரத்துச் செய்யவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு பிரஸ்தாப வழக்கில் ஏற்பட்டது 'திருமணமே' அல்ல என்று நீதிபதி அவர்கள் தீர்ப் பளித்தனர்.

இவ்விஷயத்தைப் பற்றிய ஸ்மிருதி முதலிய தர்ம சாஸ்திர வாக்கியங்கள் பல ஆராய்ச்சி செய்யப்பட்டன. ஸ்திரீத் தன்மை இல்லாதவளை 'அகன்யா' என்று இவ் வாக்கியங்கள் கூறுகின்றன. 'அகன்யா'வாக இருப்பவர்கள் எவ்வித சம்ஸ்காரத்திற்கும் அருகதை யுள்ளவர்களல்ல என்பதும் நீதிபதி அவர்களால் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. ஆகையால் இந்துச்சட்டப் படிவிவாகம் என்பது ஒரு ஒப்பந்தமல்ல என்றும், இது ஒரு 'ஸம்ஸ்காரம்' என்றும் வைத்துக் கொண்டாலும், ஸ்திரீகளாக இருப்பவர்களுடன் ஒரு ஆண் செய்து கொள்ளும் ஸம்ஸ்காரம் தான் 'விவாகம்' என்று ஏற்படும். ஸ்திரீ அல்லாதவர்களுடன் ஒரு ஆண் செய்து கொள்ளுவது 'திருமணம்' ஆகாதென்று நீதிபதி அவர்கள் எடுத்துக் காட்டி யிருக்கின்றனர். உதாரணமாக ஒரு ஆணுக்கே புடவை முதலிய உடுத்தி வேறு ஒரு ஆணுடன் கலியாணம் செய்தால் எப்படியோ அப்படியேதான் ஸ்திரீத் தன்மை இல்லாத 'அகன்யா'வுடன் செய்யப்படும் திருமணமும் என்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர்.

முஸ்லீம் மைனருக்கு அண்ணனைக் கார்டியனாக வைத்து எழுதப்பட்ட 'செட்டில்மெண்ட்' பத்திரம் செல்லவில்லை. மைனருடன் சேர்ந்த 'மேஜர்'களுக்கும் செல்லவில்லை. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு.

[ஆதாரம்:—1952 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சுப்ரீம் கோர்ட் 358]

இஸ்லாமியச் சட்டத்தில் ஒரு முக்கியமான சட்டப் பிரச்னையானது சுப்ரீம் கோர்ட்டால் இவ் வழக்கில் விளக்கப்பட்டது. ஒரு முஸ்லீம் 'மைனரு'டைய சொத்துக்களுக்குக் கார்டியன், தகப்பனே. தகப்பன் இறந்த பிறகு தகப்பனாருடைய 'உயில்'படி மைனருக்கு யாராவது கார்டியன் நியமிக்கப்பட்டிருந்தால் அப்படி நியமிக்கப் பட்டவரே தான் மைனரின் கார்டியனாவார். அப்படி ஒருவரும் தகப்பனால் நியமிக்கப் படாவிட்டால் மைனருடைய தகப்பனுடைய தகப்பன் தான் மைனருடைய சொத்துக்களுக்குக் கார்டியன். ஆனால் இப்பாட்டனுக்கும் தகப்பனைப்போல் ஒரு உரிமை உண்டு. அதாவது தமக்குப்பின் தம்முடைய மைனர் பேரனுடைய சொத்துக்களுக்கு உயில் மூலம் அவரும் ஒரு கார்டியனை நியமிக்கலாம். இந்நான்கு நபர்கள் தான் இஸ்லாமியச் சட்டப்படி ஒரு மைனருடைய சொத்துக்களுக்குச் சட்ட பூர்வமான கார்டியன்களாவார்கள்.

இந் நான்கு வகையான கார்டியன்கள் ஒருவருமில்லாவிட்டால், ஒரு முஸ்லீம் மைனருடைய சொத்துக்களுக்கு ஒரு கார்டியனை நியமிக்கக் கோர்ட்டுக்குத் தான் அதிகாரம் உண்டு. கோர்ட்டார் பார்த்து தாயையோ, அண்ணனையோ வேறு எவரையே மைனருக்குக் கார்டியனாக நியமிக்கலாம். இது தவிர வேறு ஒரு வரும் முஸ்லீம் மைனருடைய சட்டபூர்வமான கார்டியன் ஆகமாட்டார்கள்.

மேலே கண்டபடி எவ்வித சட்ட பூர்வமான கார்டியனோ கோர்ட் கார்டியனோ இல்லாத முஸ்லீம் மைனருடைய சொத்துக்களை, சில சமயங்களில் அம்மைனருடைய நெருங்கிய உறவினர்களாக தாயார், அல்லது அண்ணன் போன்றவர்கள் முன் வந்து நிர்வாகம் செய்வதுமுண்டு. ஆனால் இவர்கள் இஸ்லாமியச் சட்டப்படி கார்டியன்கள் ஆகமாட்டார்கள். இவர்களை 'நடை முறை கார்டியன்' (De Facto Guardian) என்ற அலங்காரச் சொல்லால் அழைப்பதுண்டு. இவர்களுக்கு மைனர்களுடைய சொத்துக்களைப் பொறுத்து எவ்வித அதிகாரமுமில்லை. சிற்சில சந்தர்ப்பங்களில் ஒரு முஸ்லீம் மைனருடைய சட்ட பூர்வமான கார்டியன்களும், கோர்ட் கார்டியன்களும் அம்மைனருடைய சொத்துக்களை விற்பனை செய்வதை இஸ்லாமியச் சட்டம் அனுமதிக்கின்றது. ஆனால் எவ்விதமான சந்தர்ப்பங்களிலும், எவ்வித அவசியமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்ட போதிலும், ஒரு முஸ்லீம் மைனருடைய சொத்துக்களை எவ்விதமான பராதீனம் செய்யவும் வேறு எவருக்கும், எவ்வித நெருங்கிய உறவினருக்கும் உரிமை இல்லை. கோர்ட் கார்டியனாக நியமிக்கப்படாத தாய் அண்ணன் இவர்களுக்குக்கூட அவ்விதம் செய்ய உரிமை இல்லை என்பதை நமது சுப்ரீம் கோர்ட்டார் மறுபடியும் இவ்வழக்கில் விளக்கி இருக்கின்றனர்.

பிரஸ்தாப வழக்கின் விவரங்கள்:—ஹாஜி அப்தர் ரஹிமான் என்ற ஸுன்னி முஸ்லீம் கனவான் ஏராளமான சொத்துக்களை வைத்து இறந்தார்.

அவருக்கு மனைவியும், அவள் மூலம் மூன்று மகன்களும், ஒரு பெண்ணும் இறந்த முதல் மனைவி மூலம் ஒரு பெண்ணும், ஒரு சகோதரியும் உண்டு. இவர்களைத் தவிர அவருக்கு அண்ணன் மகன்களும், அண்ணன் பேரன்களும் உண்டு. அண்ணன் மகன்களில் ஒருவர் மிக்க செல்வாக்குடையவர். ஜில்லா போர்டு மெம்பர்; வேறு பதவிகளையும் வைத்திருந்தார். இவர் இறந்த ஹாஜியாருடைய சொத்துக்களை அடைய ஒரு தந்திரம் செய்தார். அதாவது இறந்தவருடைய மனைவி என்று அழைக்கப்பட்டு வரும் ஸ்திரீயானவள் அவருடைய மனைவி அல்ல என்றும் அவள் மூலம் பிறந்த ஆண் பெண் மக்களும்

சட்ட பூர்வமான சந்ததிகள் அல்லவென்றும் அவர்கள் ஒருவரும் ஹாஜியாருக்கு வார்சுகளாக மாட்டார்களென்றும், இறந்தவர், தங்களுக்கே வாய்மொழியாக அவருடைய சொத்துக்களில் பெரும் பாகத்தைத் தானமாகக் கொடுத்து விட்டாரென்றும், பலமாக ஒரு புரளியைப் பறப்பினர். அத்துடன் சொத்துக்களுடைய சுவாதீனத்திலும் வரும்படி அடைவதிலும் கலாட்டா செய்தனர். இப்புரளியும் ஒரு காரணமாகத்தான் செய்தார்கள். ஏனென்றால் இப் போலிப் பாத்தியத்தை வைத்துக்கொண்டு இறந்த ஹாஜியாருடைய மனைவி மக்களுடன் ஏதோ தாங்கள் ராஜியாகப் போவது போல் பாவனை செய்து அவர்களுக்குள் ஒரு 'செட்டில் மெண்டு' பத்திரம் எழுதிக்கொண்டார்கள். குடும்பச் சச்சரவுகளை தாங்கள் ராஜி செய்து கொண்டு ஒரு விவஸ்தை செய்து கொள்வது போல் வாசகங்கள் அமைந்த இந்த ஸெட்டில் மெண்ட் பத்திரப்படி, கலாட்டா செய்தவர்களுக்குச் சொத்துக்களில் பாகம் கொடுக்கப் பட்டது. இந்த ஸெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொண்டவர்கள் யார் என்றால், இறந்த ஹாஜியாரின் மனைவியும், மூன்று மகன்களும், பெண்ணும், கலாட்டா செய்த ஆசாமிகளும் சேர்ந்தே இதை எழுதிக்கொண்டனர். இறந்த ஹாஜியாரின் மூன்று மகன்களில் ஒரு மகன் 9 வயதுள்ள ஒரு மைனர். அம்மைனருக்கு மூத்த அண்ணனே கார்டியனாக அப்பத்திரத்தில் காணப்பட்டிருந்தது. இந்த ஸெட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது 5-4-1940ல். ஆனால் இதை எழுதிக் கொடுத்த சில மாதங்களுக்குள்ளேயே, 25-11-1940ல் ஹாஜியாருடைய மனைவி மக்கள் யாவரும் சேர்ந்து இந்த ஸெட்டில் மெண்ட் பத்திரம் செல்லாதெனவும், தங்களுக்குச் சொத்துக்கள் சுவாதீனமாகவேண்டுமென்றும் தாவா தொடக்கினர்.

இவ்வழக்கில் ஏற்பட்ட வேறு பிரச்னைகளை நாம் இங்குக் குறிப்பிட அவசியமில்லை. இந்த 'ஸெட்டில்மெண்ட்' அல்லது விவஸ்தாபத்திரம் செல்லாதென்று சுப்ரீம் கோர்ட்டார் முடிவு செய்தனர். ஏனென்றால், இதை எழுதிக் கொடுத்தவர்களுள் ஒருவர் மைனர். அம்மைனருக்குக் 'கார்டியனாக' இருந்து மைனருடைய சொத்துக்களைப் பாதிக்கும்படி இப்பத்திரம் எழுதிக் கொடுத்த மைனருடைய அண்ணன் இஸ்லாமியச் சட்டப்படி சட்ட பூர்வமான கார்டியனுமல்ல; கோர்ட்டால் நியமிக்கப்பட்ட கார்டியனும் அல்ல. எச்சந்தர்ப்பத்திலும், மைனருக்கு எவ்வளவு லாபகரமாக இருந்த போதிலும்கூட மைனருடைய சொத்துக்களைப் பராதீனம் செய்ய அண்ணனுக்கு உரிமை இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டனர். அப்படியானால் மைனருடைய பாக சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில்தானே இந்த 'ஸெட்டில்மெண்ட்' செல்லாது—என்ற பிரச்னையைப் பற்றியும் சுப்ரீம் கோர்ட்டார் இவ்வழக்கில் முடிவு செய்தனர். செல்லாத இப்பத்திரம் முழுமையுமே செல்லாதென்றும், அதாவது மைனருடைய பாகம் சம்பந்தப் பட்டவரையில் மட்டுமல்ல, மேஜரானவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் கூட இப்பத்திரம் முற்றிலுமே அறவே செல்லத்தக்கதல்ல என்று அபிப்பிராயப்பட்டு, எல்லா வாதிகளும் எல்லாச் சொத்துக்களையும் அடையும்படி சுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பளித்தனர்.

டிக்ரிக் கடனுக்காக விவசாயியின் வீட்டையும் காலி நிலத்தையும் ஜப்தி செய்யலாமா?

[ஆதாரம்:—65 லா வீக்லி—1184.]

டிக்ரித் தொகையை வசூல் செய்யப் பிரதிவாதியின் சொத்துக்களை ஜப்தி செய்யலாம் என்று சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் இருக்கிறது. ('பிரதிவாதி' என்றால் டிக்ரிப்படி எந்த நபர் தொகை கொடுக்கவேண்டுமோ (Judgment Debtor) அவரைத்தான் இங்கே குறிப்பிடப்படுகிறது. சில சமயங்களில் தாவா செய்த வாதியே பிரதிவாதிக்குத் தொகை கொடுக்கும்படியாக டிக்ரி ஏற்படலாம்.) ஆனால் பிரதிவாதிக்குச் சொந்தமான சில வகைச் சொத்துக்களை ஜப்தி செய்ய அச்சட்டம் அனுமதிக்கவில்லை. இவை என்ன என்று சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் (Civil Procedure Code) செக்ஷன் 60ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அவையாவன:—(1) பிரதிவாதிக்கும், அவர் மனைவி குழந்தைகளுக்கும் சொந்தமான துணி மணி, சமையல் பாத்திரங்கள், படுக்கை இவைகளும், மத ஆசாரப்படி ஒரு ஸ்திரீயானவள் கழற்ற முடியாத நகைகளும் (2) தொழிலாளர்களின் ஆயுதங்கள்; பிரதிவாதி விவசாயியாக இருந்தால், விவசாயம் செய்யத் தேவையான உபகரணங்கள்; அவருடைய ஜீவனத்தை

நடத்த அவசியமென்று கோர்ட்டால் நிர்ணயிக்கப்படும் கால் நடைகள், விதைகள்; (3) விவசாயிக்குச் சொந்தமாயும் அவருடைய அனுபவத்திலுமுள்ள வீடுகளும் கட்டடங்களும், அவற்றைச் சேர்ந்த மேல் கட்டடம் கீழ் நிலம் உள்படவும் அவற்றின் உபயோகத்திற்கு அவசியமானதாயும் அவற்றிற்குப் பக்கத்திலுமிருக்கிற நிலமும்; (4) கணக்குப் புத்தகங்கள்; (5) நஷ்ட ஈடு கிடைக்கத் தாவா செய்யும் உரிமை; (6) சரீர ஊழியம் அடையும் உரிமை; (7) பென்ஷன்; கிராட்யூடி; (8) தொழிலாளர்கள், வேலைக்காரர்கள் இவர்களின் கூலி —இவை ரொக்கமாக இருந்தாலும் இனமாக இருந்தாலும் ஒன்றுதான்; ஒருவர் அடையும் சம்பளத்தில் முதல் 100 ரூபாயும் அதற்கு மேல் உள்ள சம்பளத்தில் சரிபாதித் தொகையும்; (9) ராணுவத்தில் சேவை செய்பவர்களின் சம்பளமும் அலவன்சும்; (10) விதிவிலக்களிக்கப்பட்ட சேமிப்பு நிதித் தொகைகள்; (11) விதிவிலக்களிக்கப்பட்ட அலவன்சு தொகைகளும்; சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர் அல்லது சிப்பந்தி அடையும் ஜீவனாதாரத் தொகைகளும்; (12) இனி வரக்கூடிய வார்சு பாத்தியங்கள்; (13) இனி கிடைக்க வேண்டிய ஜீவனாம்சத் தொகைகள்; (14) வேறு சட்டங்களால் விதிவிலக்கு அளிக்கப்பட்ட அலவன்சு தொகைகள்; (15) கிஸ்திபாக்கிக்கு ஜப்தி செய்ய முடியாத சொத்துக்கள். மேலே கண்ட சொத்து வகைகளையும் தொகை முதலியவற்றையும் எவரும் ஜப்தி செய்யக் கூடாதென்று மேலே கண்டபடி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மேலே 3-ஆவதாகக் கண்டிருக்கும் ஷரத்துக்கு அர்த்தம் என்ன? "விவசாயி"க்குச் சொந்தமாய் அவருடைய அனுபவத்திலுள்ள வீட்டையும் பக்கத்திலிருக்கும் நிலத்தையும் ஜப்தி செய்யக் கூடாதென்று இருக்கிறதே. 'விவசாயி' என்பது யாரைக் குறிக்கும் என்ற சட்டப் பிரச்னை இவ்வழக்கில் ஏற்பட்டது.

ஒரு ஸ்திரீமீது டிக்ரி ஏற்பட்டிருந்தது. அவளுக்குக் கொஞ்சம் சொந்த நிலமும் இருந்தது. தவிர அவள் வேறு ஒருவருக்குச் சொந்தமான 13 ஏகர் நிலத்தை குத்தகைக்கும் எடுத்திருந்தாள். இருந்தாலும் அவள் வீட்டுக்கு வெளியே போய், நேரில் எந்த நிலங்களையும் சாகுபடி செய்வதில்லை. ஆனால் அவள் தன்னுடைய ஜீவனத்திற்கு இந்நிலங்களையேதான் நம்பி இருந்தாள். வேறு வருமானம் இல்லை. டிக்ரியை நிறைவேற்ற இவளுக்குச் சொந்தமும் அனுபவமுமுள்ள வீட்டையும் பக்கத்திலுள்ள ஒரு காலி நிலத்தையும், வேறு இடத்திலுள்ள ஒரு காலி நிலத்தையும் டிக்ரிக்காரர் ஜப்தி செய்தார். "நான் விவசாயி. இச்சொத்துக்களை ஜப்தி செய்யச் சட்டம் இடம் கொடுக்காது"—என்று பிரதிவாதி கட்சி சொன்னாள். "இவள் நேரில் நிலங்களுக்குப் போய் சாகுபடி செய்வதில்லை. வேறு ஆட்களைக் கொண்டுதான் விவசாயம் செய்கிறாள். ஆகையால் இவள் விவசாயி அல்ல. இவளுக்கு மேலே கண்ட விதி விலக்குக் கிடையாது" — என்று வாதி ஆட்சேபித்தார்.

இவளும் விவசாயிதான் என்று சென்னை ஹைகோர்ட்டில் உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். இச் சட்டத்தில் 'விவசாயி' என்றால் நேரில் சாகுபடி செய்ய வேண்டுமென்பது கட்டாயமில்லை என்றும்; வேறு வருவாய் இல்லாமல் தன்னுடைய ஜீவனத்தை நடத்த நிலங்களையே நம்பி இருப்பவரும் இச்சட்டப்படி விவசாயி'தான் என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். பிரதிவாதியின் வீட்டையும் அதற்கு அடுத்தாற்போல் இருக்கும் காலி நிலத்தையும் ஜப்தி செய்யக்கூடாதென்றும், ஆனால் வீட்டிற்கு அப்பால் தனியாக இருக்கும் காலி நிலத்தை ஜப்தி செய்யச் சட்டத்தில் தடை இல்லை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

(குறிப்பு:—"விவசாயி" என்ற வார்த்தை பல சட்டங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொரு விதமாக இதற்குப் பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலே விளக்கப்பட்ட வழக்கானது சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் "விவசாயி" என்பது யாரைக் குறிக்கும் என்பதைப்பற்றித்தான். மற்றச் சட்டங்களில் "விவசாயி" என்பது எவரைக் குறிக்கும் என்பதற்கு இவ்வழக்கும் அதில் ஏற்பட்ட தீர்ப்பும் பொருந்தாது என்பதைக் கவனிக்கவும்.)

தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் திட்டம்

1948-ம்௵த்திய தொழிலாளரின் அரசாங்க இன்ஷூரன்ஸ் சட்டம் ஜம்மு, காஷ்மீர் ராஜ்யங்கள் நீங்கலாக இந்திய நாடு முழுவதும் இப்போது அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

திட்டத்தின் அவசியம்.

தனக்கோ அல்லது தன் குடும்பத்துக்கோ ஜீவனத்துக்கு வேண்டிய சம்பாத்தியத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும் தன் சம்பாத்தியத்துக்குத் தடங்கல் செய்யக்கூடிய சில ஆபத்துக்களுக்குட்பட வேண்டியிருக்கிறது. நோய், நீங்காப் பிணி, மூப்பு, தொழிலாற்றுங்கால் காயமடைதல், தாய்மை (கருவுயிர்த்தல்) வேலையின்மை, சாவு ஆகிய இவைகள் மேற்கூறிய ஆபத்துக்களாகும்.

இவ்வெதிர்பாராத ஆபத்துக்கள், முக்கியமாய் நோய், காயம், கருவுயிர்த்தல் முதலியவை இரட்டைச் சாபங்கள் என கருதக்கூடியவை; அதாவது இவ்வாபத்துக்களுக்கு இலக்கான நபர்கள் தங்கள் வருமானத்தை இழந்துவிடுவதுமன்றி அவ்வாபத்துக்கள் சம்பந்தமாய்ப் பணச் செலவும் செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இவ்வாபத்துக் காலங்களில் துணை செய்வதற்காகச் சிலர் சிறிது பணம் சேமித்து வைக்கலாம். இச் சேமிப்புத் தொகை செலவுக்குப் போதுமானதாய் இருப்பதில்லை. சாதாரணமாய் அவ்வாபத்துக்குட்பட்ட நபர்கள் அபரிமிதமான வட்டிக்குக் கடன் வாங்கும் நிலைமையை அடைய நேரிடுகிறது.

அவிபத்த குடும்ப முறை, தனிப்பட்டவர்கள் தருமங்கள், சமூக உதவி முதலிய வழி வகைகளைக் கொண்டு இவ்வாபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். தற்கால நிலைமையில், பொருள்களின் விலை உயர்ந்து அதற்கேற்ப நபர்களைப் பாதுகாப்பதற்கான சம்பள அல்லது ஊதிய உயர்வு இல்லாதபோது, மேற்கூறிய ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குச் சமூக அங்கத்தினர் யாவரும் கூட்டு முயற்சி மூலம் இன்ஷூர் செய்வது சிறந்த முறையாகும். அம்முறைக்கு பலதரப்பட்ட சமூக இன்ஷூரன்ஸ் என்று பெயர். அம்முறைகளாவன:—சுகாதாரத்துக்கான இன்ஷூரன்ஸ், முதுமைப் பருவத்துக்கான இன்ஷூரன்ஸ், வேலையின்மைக்கான இன்ஷூரன்ஸ் முதலியன.

இந்திய நாடு சிக்கலான பிரச்னைகள் நிறைந்த ஒரு பெரிய தேசம். இச் சிக்கல்களை ஒரே காலத்தில் தீர்த்து வைப்பது கூடாத காரியம். இச் சிக்கல்களில் சிலவற்றைத் தீர்த்து வைப்பதற்கு ஏதாவது ஒரு திட்டத்தை ஆரம்பிப்பது அவசியமாகிறது. இந்த நோக்கங்கொண்டு, நோய், தாய்மை, தொழிலாற்றுங்கால் ஏற்படும் காயங்கள் முதலியவற்றால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நற்பயன் அளிக்கும் வகையில் 1948-ம்௵த்திய தொழிலாளரின் அரசாங்க இன்ஷூரன்ஸ் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1952ம்௵ பிப்ரவரி௴ 24௳ பிரதம மந்திரி இத்திட்டத்தை டில்லி, கான்பூர் ஆகிய இடங்களில் ஆரம்பித்து வைத்தார். இவ்விரு இடங்களிலும், இத்திட்டத்தின் அநுகூல ஏற்பாடுகளை நிறைவேற்றி வைக்க, தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆரம்பித்துள்ளது. 1954ம் ஆண்டு முடிவடைவதற்குமுன் இத்திட்டத்தின் பூரா நிறைவேற்றமும் நம் நாட்டின் முக்கிய பகுதிகளில் விஸ்தரிக்கப்படும். மேற்கூறிய அதே தேதியில் அதாவது 1952ம்௵ பிப்ரவரி௴ 24௳யில் நாட்டில் ஊழியர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் முதலாளிகள் வழங்க வேண்டிய விசேஷ தொகை சம்பந்தமான ஏற்பாடுகளும், இந்தியாவில் ஜம்மு, காஷ்மீர் நீங்கலான "ஏ" பகுதி, "பி" பகுதி, "சி" பகுதி ராஜ்யங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இச்சட்டத்தால் பயன் அடைபவர்கள்

இருபது நபர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் அமர்ந்து வேலை செய்யும்-மின்சாரத்தால் இயங்கும் - தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும். 1948-ம்௵த்திய தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள "சீசனல்" தொழிற்சாலைகளுக்கும், இந்திய சுரங்கச் சட்டத்துக்குட்பட்ட சுரங்கங்களுக்கும், ரெயில்வே ரன்னிங் ஷெட்டுகளுக்கும் இச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

மாதமொன்றுக்கு ரூ. 400-க்கு மேற்பட்ட சம்பளம் வாங்குபவர் நீங்கலாக, தொழிற்சாலைகளில் வேலை செய்யும் நிரந்தர, தாற்காலிக, கைத்தொழிலாளர், கிளர்க்குகள், மேற்பார்வையாளர் ஆகிய எல்லா தொழிலாளர்களும் சிப்பந்திகளும் இத் திட்டத்துக் குட்பட்டவர்களாவார்கள். இராணுவத்தில் அமர்ந்துள்ள நபர்கள் இச்சட்டத்துக்குட்பட்டவர்கள் அல்லர்.

நிர்வாகம்.

இச்சட்ட நிபந்தனைகளை நிர்வகிக்க தொழிலாளரின் அரசாங்க இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் என்னும் ஸ்தாபனம் 1948-ம் வருஷம் அக்டோபரில், இச்சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ளது. சட்டரீதியான இந்த கார்ப்பரேஷன் புது டில்லியில் தலைமைக் காரியாலயத்தின் மூலம் செயலாற்றி வருகிறது. இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி ஆதிக்கத்தின்கீழ் செயலாற்றும் இந்த ஸ்தாபனம் Quasi-Government ஸ்தாபனமாகும். மேற்படி கார்ப்பரேஷன் மதராஸ், பம்பாய், கல்கத்தா, டில்லி, கான்பூர் என்னும் ஐந்து இடங்களில் பிரதேச காரியாலயங்களை நிறுவியுள்ளது. மதராவிலுள்ள பிரதேச காரியாலயம், 162, ராயப்பேட்டை ஐரோடு, மயிலாப்பூர், சென்னை-4, என்னும் ஸ்தலத்தில் பணியாற்றி வருகிறது. இப்பிரதேச காரியாலயங்கள் முதலாளிகள் வழங்கவேண்டிய விசேஷ தொகைகளை வசூலிப்பதும், தத்தம் பிரதேசங்களில் இச்சட்டத்தை நிறைவேற்றிவைப்பதற்கான அவசிய வேலைகளைச் செய்வதும் ஆகிய பணிகளில் ஈடுபட்டுவரும்.

இந்த ஸ்தாபனத்துக்கு ஒரு ஸ்டான்டிங் கமிட்டி உண்டு. வைத்திய அநுகூலங்களைக் குறித்து ஆலோசனை கூற இந்த ஸ்தாபனத்தில் ஒரு வைத்திய அநுகூல கவுன்சில் உண்டு.

கார்ப்பரேஷன், கமிட்டி, கவுன்சில் முதலியவற்றில் தொழிலாளர் பூரண பிரதிநிதித்துவம் பெற்று விளங்குகிறார்கள். பிரதேச காரியாலயங்களில் போர்டுகளும், கமிட்டிகளும் உண்டு. இவற்றிலும் தொழிலாளர்கள் பிரதி நிதித்துவம் வகிக்கிறார்கள். இத்திட்டம் சம்பந்தமான சர்வ அம்சங்களின் நிர்வாகத்தைக் குறித்துத் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க தொழிலாளர்களுக்குப் பூரண சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

இத்திட்டத்தால் ஏற்படும் அநுகூலங்கள்

இச்சட்டத்தின் பிரகாரம் இன்ஷூர் செய்துள்ள நபர்களுக்குக் கீழ்க்கண்ட அநுகூலங்கள் உண்டு.

வைத்திய அநுகூலம்

அரசாங்க இன்ஷூரன்ஸ் வைத்திய சாலையில் இலவச வைத்தியம் கிடைக்கும். சம்பந்தப்பட்ட நபர் வைத்திய சாலைக்குச் செல்ல சக்தியற்றிருந்தால், அவ்வைத்தியசாலையின் டாக்டர் அவர் வீட்டுக்குச் சென்று வைத்திய உதவியளிப்பார். ஆபத்துக்கிடமான சந்தர்ப்பங்களில் வைத்திய சாலையின் மோட்டார் வண்டியும் அவருக்குக் கிடைக்கும்.

நோய் அநுகூலம்

தகுதிவாய்ந்த ஒரு இன்ஷூரான நபர், தனக்குண்டான நோயின் காரணமாக வேலை செய்வதற்கு இயலாவிட்டால், 365 நாட்கள் கொண்ட ஒரு வருஷத்தில் 56 நாட்களுக்கு அவருக்கு அரைச் சம்பளம் வழங்கப்படும்.

தாய்மை அநுகூலம்

தகுதிவாய்ந்த இன்ஷூரான ஒரு ஸ்திரீக்கு, பிரசவ காலத்தில் இலவச வைத்திய உதவியும், பேர்பாதி நாட் கூலியும் அல்லது நாளொன்றுக்கு அணா 12-ம் வழங்கப்படும். இவ்வூதியம் 12 வார காலத்துக்கு வழங்கப்படும். பிள்ளைப் பெறுவதற்கு ஆறு வாரங்களுக்கு முன்பிருந்தே இவ் ஊதியம் வழங்கப்படும்.

காயத்தால் வேலை செய்ய சக்தியில்லாதவர்களுக்கு அநுகூலம்

வேலையில் ஈடுபட்டுள்ளபோது ஒரு தொழிலாளர் காயமடைந்தால் அவருக்கு இலவச வைத்திய உதவியும், வேலை செய்ய இயலாமல் இருக்கும் வரையில் அரைச்சம்பளமும் வழங்கப்படும். அவர் வேலைசெய்ய இயலாத காலம் வரைக்கும் சர்டிபிகேட் பெறவேண்டும்.

அவர் நிரந்தரமாகப் பூரண அசக்தராய் விட்டால் அவருக்கு ஜீவகால பரியந்தம் அரைச் சம்பளம் பென்ஷனாக வழங்கப்படும். அவர் நிரந்தரமாக ஏக தேச அசக்தராய் விட்டால் அவர் ஊதியத்தில் ஒரு பாகம் ஜீவிய பென்ஷனாக வழங்கப்படும்.

குடும்பத்தினருக்கான அநுகூலம்.—இன்ஷூர் செய்துள்ள நபர் வேலையில் பட்ட காயத்தின் பலனாக இறந்து விட்டால் அவருடைய விதவைக்கும், குழந்தைகளுக்கும் அரைச் சம்பளத்துக்குச் சமமான பென்ஷன் வழங்கப்படும். விதவையின் பென்ஷன் இறந்தவர் ஊதியத்தில் 10-ல் மூன்று பாகமும் குழந்தையின் பென்ஷன் 5-ல் ஒரு பாகமும் ஆக வழங்கப்படும்.

விசேஷக் குறிப்பு.—கணிசமான எண்ணிக்கையுள்ள இன்ஷூர் நபர்கள் ஓரிடத்தில் வசித்து வந்தால் அவ்விடத்துக்குச் சமீபத்தில் ஒரு

ஆஸ்பத்திரி நிறுவப்படும். அதனால் அந்தந்த நபருக்கு வைத்திய உதவி அளிக்கக் கூடிய வைத்தியசாலை இது இது என்று முன்னதாகவே குறிப்பிடப்படும். சில வெளிப் பிரதேசங்களுக்கு இங்கு மங்கும் இயங்கும் வைத்திய சாலைகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இதுதான் இத்திட்டத்தின் குறிக் கொள்ளத் தக்க அம்ச மாகும்.

தொழில் அளிக்கும் முதலாளிகள் வழங்கவேண்டிய தொகை

1952-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 24-ந் தேதி முதற்கொண்டு, முதலாளிகள், ஊழியர்கள் சம்பளப்பட்டியலில் குறித்துள்ள தொகையில் ¾ சத விகிதத் தொகையை வழங்க வேண்டும். இத்திட்டத்தின்படி அவர்கள் வழங்க வேண்டிய தொகையின் சதவிகிதம் மிகவும் குறைச்சலாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதற்குக் காரணம். 1923-ம் வருஷத்திய தொழிலாளர் நஷ்ட ஈடு சட்டத்தின் கீழும், தாய்மை அநுகூலச் சட்டத்தின் கீழும் அவர்கள் தொடர்ந்து தொகைகள் வழங்கவேண்டி யிருப்பதேயாகும். முதலாளிகள் வழங்கவேண்டிய விசேஷ தொகை எனப் பெற்ற தொகையை அவர்கள் வருஷத்துக்கு நான்கு முறை அதாவது மார்ச்சு மாதம் 31-ந் தேதியிலும், ஜூன் மாதம் 30-ந் தேதியிலும், செப்டம்பர்மாதம் 30-ந் தேதியிலும் டிசம்பர் மாதம் 31-ந் தேதியிலும் செலுத்தவேண்டும்.

இத்தொகை மேற்குறித்த தேதிகளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். அதோடுகூட ஒவ்வொரு முதலாளியும் ஒவ்வொரு குவார்டர் முடிவடைந்த 45 நாட்களுக்குள், கார்ப்பரேஷன் ஸ்தாபனத்தாரால் பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்டுள்ள "பாரம் எஸ்வி—2" என்னும் பாரத்தைப் பூர்த்தி செய்து பிரதேச காரியாலயத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டியது. இத்தொகை இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவின் கிளை ஆபீசுகளில் செலுத்தவேண்டியது.

சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா தொழிற்சாலை முதலாளிகளும் மேல் பாராவில் குறித்துள்ள இத் தொகையைக் கட்டாயம் செலுத்த வேண்டும். சென்னை ராஜ்யத்தின் தொழிற்சாலை முதலாளிகள் செலுத்தும் தொகையைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தது தொழிலாளர் சர்க்கார் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனின் சென்னைப் பிரதேச காரியாலயமாகும்.

இத்திட்டத்தின் அநுகூல விதிகள், சென்னை ராஜ்யத்தில் இரண்டொரு முக்கிய இடங்களில் 1953-ம் ஆண்டில் ஏதாவது ஒரு தேதியில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அத்தேதிவரையில், சென்னை ராஜ்யத்திலுள்ள தொழிற்சாலை முதலாளிகள் ¾ சத விகிதத் தொகையை, மேல் பாராவில் குறித்துள்ளபடி தொடர்ந்து செலுத்தி வரவேண்டியது. அக்காலம் வரைக்கும் தொழிலாளர்கள் யாதொரு தொகையும் செலுத்தவேண்டியதில்லை. அது வரை அவர்கள் இத்திட்டத்தின் கீழ் யாதொரு அநுகூலமும் அடைய அருகரல்லர். ஏற்கனவே சொன்னபடி எப்பிரதேசத்தி லாகிலும் இத்திட்டம் முழுவதும் அமல் நடத்தப்படும்வரையில் அப்பிரதேசத்திலுள்ள தொழிற்சாலை முதலாளிகள், தொழிலாளர் நஷ்ட ஈடு சட்டம், தாய்மை அநுகூலச் சட்டம் ஆகியவை சம்பந்தமாய்ச் செலுத்தவேண்டிய தொகையை முன்னேற்பாட்டின்படி தொடர்ந்து செலுத்தி வரவேண்டும். ஒரு பிரதேசத்தில் இம் முழுத் திட்டமும் நிறைவேற்றி வைக்கப்பட்டால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த தொழிற்சாலை முதலாளிகளும், தொழிலாளர்களும், கான்பூர், டில்லி ஆகிய ஸ்தலங்களிலுள்ள தொழிற்சாலை முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சமமாகப் பாவிக்கப்படுவார்கள்.

தொழிலாளிகளின் கூட்டுறவு

மேற்சொன்ன அநுகூலங்களை அளிப்பதற்கான தக்க ஏற்பாடுகள் செய்வதற்கு, ஒவ்வொரு தொழிலாளியைப் பற்றிய முக்கிய விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்காகவே, தொழிற்சாலை முதலாளிகளின் மேற்பார்வையில் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர்கள் உறுதிமொழி நமூனுக்களைப் பூர்த்தி செய்யவேண்டியது அவசியமாகிறது.

தொழிலாளிகளின் பெயர், அவர் தகப்பன் பெயர், வசிக்குமிடம், முழு மேல்விலாசம், (நிரந்தரமான, தற்போதைய) பிரதேசக் காரியாலயத்தின் பெயர், வைத்திய சாலை, நாமினியின் பெயர் (தொழிலாளியின் மரணத்தின் போது அவருக்குரிய அநுகூலங்களை அடையத் தகுதிவாய்ந்தவர்) மேற்கண்ட விவரங்கள் அடங்கிய நமூனுவைப் பூர்த்திசெய்து கொடுப்பது தொழிலாளியின் அனுகூலத்திற்கே. அவன் அவ்விதம் அந்த நமூனுவைப் பூர்த்திசெய்து கொடுத்தால், நிர்ணயிக்கப்பட்ட நாளில் தனக்குரிய அநுகூலங்களைச் சுலபமாகப் பெறலாம். முக்கியமாய், வைத்திய சாலையையும், பிரதேச காரியாலயத்தையும் ஜாக்கிரதையுடன் தேர்ந்தெடுப்பதால் பிறகு அவனுக்கு அநுகூலங்கள் உண்டு. உறுதிமொழி நமூனுக்கள் பூர்த்திசெய்து கொடுக்காத தொழிலாளர்கள் அநுகூலமடைவது சாத்தியமில்லை. எப்படி யிருந்தபோதிலும் அத் தொழிலாளி செலுத்த வேண்டிய தொகையை முதலாளி பிடித்துக் கொள்வது நிச்சயமே.

உறுதிமொழி நமூனுக்களைப் பூர்த்திசெய்து கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்ட காரியாலயங்

களுக்கு அனுப்பிய பின் தொழிலாளரின் அடையாளக் குறிப்புச் சீட்டுகள் தயாரிக்கப்படும். அக் குறிப்புச் சீட்டுகள், தொழிற்சாலை முதலாளிகள் மூலம் அந்தந்த் தொழிலாளிக்கு அளிக்கப்படும். இந்த அடையாளக் குறிப்புச் சீட்டைப் பெறும் வரையில் தொழிற்சாலை முதலாளி அளித்துள்ள தாற்காலிக அடையாளக் குறிப்புத் துண்டை தொழிலாளர்கள் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். அடையாளக் குறிப்பு கார்டு அல்லது சீட்டு, அவர்கள் ரொக்க அநுகூலம் அல்லது வைத்திய உதவி பெற வேண்டியிருக்கும்போது அவர்களுக்குத் தேவையிருக்கும்.

இத்திட்டத்துக்கான செலவுகள்

இத்திட்டத்துக்கான செலவுத் தொகைகள் தொழிற்சாலை முதலாளிகள் செலுத்தவேண்டிய தொகையிலிருந்தும், இந்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்கள் இதற்கென வழங்கும் கிராண்ட் தொகைகளிலிருந்தும் செலவழிக்கப்படும். தொழிலாளர் இவ்வனுகூலங்களை, தருமமாக அல்லாமல் தங்கள் சொந்த உரிமையாகப் பெறத் தகுதி வாய்ந்தவர்களாயிருப்பதற்கு, மிகவும் சொற்ப ஊதியம் பெறும் தொழிலாளர் நீங்கலாக, எல்லாத் தொழிலாளர்களும் சொற்ப தொகை செலுத்த வேண்டும். இவ்வாறு தொழிலாளர் செலுத்தும் சொற்ப தொகை அவர்கள் அடையும் அநுகூலங்களுக்கான செலவில் மூன்றில் ஒரு பாகத்துக்கும் குறைந்திருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் செலுத்த வேண்டிய விகிதங்கள் பின்வருமாறு:—

தொழிலாளியின் சராசரி தினக்கூலி.	ஒவ்வொரு வாரம் செலுத்த வேண்டிய தொகை.
ரூ. 1-க்குக் குறைந்திருந்தால் ஒன்றும் செலுத்த வேண்டியதில்லை	ரூ. அ. பை.
ரூ. 1-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 1-8-0க்குக் குறைந்தும் இருந்தால்.	0 2 0
ரூ. 1-8-0-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 2-க்குக் குறைந்தும் இருந்தால் ..	0 4 0
ரூ. 2-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 3-க்குக் குறைந்தும் இருந்தால்.	0 6 0
ரூ. 3-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 4-க்குக் குறைந்தும் இருந்தால்.	0 8 0
ரூ. 4-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 6-க்குக் குறைந்தும் இருந்தால்.	0 11 0
ரூ. 6-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 8-க்குக் குறைந்தும் இருந்தால்.	0 15 0
ரூ. 8-க்கு மேற்பட்டிருந்தால்.	1 4 0

இதர நாடுகளிலுள்ள திட்டங்கள்

விஸ்தார முறையில் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள், இதர நாடுகளில் நெடுங்காலமாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறி வருகின்றன. இந்தியாவில் சமூகப் பாதுகாப்புக்கு இத்திட்டம் முதற்படியே. தொழிலாளர்செலுத்தும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படும் தொகை சொற்பம். அத்தொகையைச் செலுத்துவதன் மூலம் இத்திட்டத்தின்கீழ் தங்களுக்குச் சொந்த உரிமையாக அவர்கள் கணிசமான நற்பலன்கள் பெற அருகதையுடையவர்களாகிறார்கள். அத் தொழிலாளருள் பெரும்பாலார் இதுவரையில் அடைந்துவரும் அநுகூலங்களைக் காட்டிலும் பல வகையிலும் இத்திட்டத்தின்கீழ் அவர்கள் பெறும் அநுகூலங்கள் சிறந்தவையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது அவர்கள் பெறும் அநுகூலங்கள் கொஞ்சமாகத் தோன்றினபோதிலும், இத் திட்டம் அவர்களுக்கே உரியதென்பதையும், அவர்கள் செலுத்தும் தொகையும், தொழிற்சாலை முதலாளிகள் வழங்கும் தொகையும், இந்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் வழங்கும் கிராண்டுகளும், அவர்கள் அநுகூலம் பெறுவதற்குப் பயன் படுத்தப்படும் என்பதையும் அவர்கள் ஞாபகத்தில் இருத்திக்கொள்ள வேண்டியது.

தொழிலாளரின் குடும்பத்தினருக்கும் வைத்திய உதவி அளிக்கும் வகையில், வெகு சீக்கிரம் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. காலம் போகப் போக இத்திட்டம் திறமையுடன் நிறைவேற்றப்படுமாயின், வெற்றியடையுமாயின், வேலையின்மை, மூப்பு, குடும்பத்தில் ஜீவித்திருப்போருக்கு அளிக்கப்படவேண்டிய அநுகூலங்கள் முதலியவை சம்பந்தப்பட்ட இதுபோன்ற இதர திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். (ஆதாரம் :—சென்னைச் செய்தி 1952 டிசம்பர்.)

தொழிற்சாலைச் சட்ட அமுல் விபரம்

1951-ம் ஆண்டு இந்த ராஜ்யத்தில் தொழிற்சாலைகள் சட்டமும், (Factories Act) மற்றும் அதைச் சார்ந்த இதர சட்டங்களும் அமுல் நடத்தப்பட்ட விவரங்களின் முக்கிய அம்சங்களாவன:—

இந்த ராஜ்யத்தில் 1951-ம் ஆண்டு இறுதியில் 12,336 தொழிற்சாலைகள் இருந்தன; அதற்கு முந்திய வருஷத்தில் 10,330 இருந்தன.

இவ்வருடம் அன்றாடம் சராசரி வேலை செய்து வந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 4,17,545; 1950-ம் ஆண்டில் சராசரி எண்ணிக்கை 3,91,557. தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டதற்குக் காரணம் தொழிற்சாலைகள் அதிகரித்ததே ஆகும்.

இவ்வருஷம் 21,815 பரிசோதனைகள் நடைபெற்றன. காலக் குறைவினால் 313 தொழிற்சாலைகள் பரிசோதனை செய்யப்படவில்லை; சென்ற வருஷம் பரிசோதனை செய்யப்படாது போன தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 95.

தொழிற்சாலை நிர்வாகிகள் தொழிலாளர்களின் நலத்தில் தொடர்ந்து அக்கறை காட்டி வந்தனர். இவ்வருஷம் 16 தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தன; மூன்று தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி போதனைக்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப் பட்டன. தொழிற் சாலைகளில் தற்சமயம் இருந்து வரும் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து திருப்திகரமான சேவை செய்து வந்தன.

தொழிலாளர்களின் தேக சுகம் எப்போதும் போல் இருந்தது. எந்தத் தொழிற்சாலையினின்றும் கொள்ளை நோய்கள் பற்றிய அறிவிப்பு எதுவும் கிடையாது. தொழிலாளர்களின் வருமானம் சற்று அதிகரித்தது. சென்னை நகரில் வாழ்க்கைத்தரப் புள்ளி எட்டு பாயின்ட் உயர்ந்தது.

வேலை நிறுத்தங்கள்.

1951-ம் ஆண்டில் 223 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன; 1950-ம் ஆண்டில் 81 வேலை நிறுத்தங்கள். 88 தகராறுகளில் தொழிலாளர், தொழிற்சாலைகள் இலாகாவினர் சமரஸ உடன்பாடு ஏற்படுத்துவதில் வெற்றியடைந்தனர். வேலை நிறுத்தங்கள் அதிகமானதற்கு ஓரளவு காரணம் தொழிற்சாலைகள் அதிகரித்ததே; அது தவிர இதற்கு முக்கிய காரணம் தொழிற் சங்கங்கள் ஏற்பட்டுத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகள் பற்றி நன்கு உணர்ந்து கொண்டிருப்பதுதான். சமரசம் ஏற்படுத்துவதில் அதிகாரிகள் அதிக சிரத்தை காட்ட வேண்டும் என்று சர்க்கார் வற்புறுத்தியுள்ளனர்.

விபத்துகள்.

ஐந்து தொழிற்சாலைகளில் தீ விபத்து ஏற்பட்டது; இதனால் ரூ. 5,68,016 மதிப்புச் சொத்துக்குச் சேதம் ஏற்பட்டது. ராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலையொன்றில் வெடி விபத்து ஏற்பட்டு மூவர் மரணமடைந்தனர்.

இவ்வருஷம் தொழிலாளர்களுக்கு விபத்துக்கள் 6,650 ஏற்பட்டன; 1950-ம் ஆண்டில் 6,423 விபத்துக்கள் நிகழ்ந்தன. ஆனால் விபத்துக்களின் காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 1950-ம் ஆண்டில் 42 ஆக இருந்தது. 1951-ம் ஆண்டில் 28 ஆக குறைந்தது. மரணமேற்படாத விபத்துக்கள் பெரும்பாலும் ரயில்வே தொழிற்சாலைகளிலும் நெசவாலைகளிலுமே நிகழ்ந்தன.

1,292 தொழிற்சாலை மானேஜர்களும், உடையவர்களும் இவ்வருஷம் குற்றத்துக்காகச் சார்ஜ் செய்யப்பட்டனர்; சென்ற வருஷம் பிராசிக்யூஷன் செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 262. 1,154 தொழிற்சாலையினர் தண்டனை விதிக்கப்பட்டனர்; 1950-ம் ஆண்டில் தண்டனை பெற்றவர்கள் 180. சாதாரணமாக எடுத்துக் காட்டுவதின் மூலம் சீர்படக்கூடிய சிறு குற்றங்களுக்கெல்லாம் பிராசிக்யூஷன் நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

பிரசவ உதவி சட்டம்

ஸ்திரீ தொழிலாளர்கள் பற்றிய தகவல்களை 3,311 தொழிற்சாலைகள் தெரிவித்திருந்தன; அதன்படி இவற்றில் தினம் சராசரி வேலை செய்துவந்த ஸ்திரீ தொழிலாளர்களின் எண்ணிக்கை 86,869; 1950ம் ஆண்டில் ஸ்திரீ தொழிலாளர்களின் எண்ணிக்கை 88,526. பிரசவ உதவி கோரிக்கைகள் இவ்வருஷம் 4,167 வந்தன; சென்ற வருஷம் 3,723 கோரிக்கைகள் வந்தன; இவ்வருஷம் பிரசவ உதவிக்காக அளிக்கப்பட்ட தொகை ரூ. 1,48,862--14--0; 1950-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட பணம் ரூ. 1,36,180--14--0. பிரசவத்துக்குப் பிற்பட்ட நான்கு வாரங்களுக்குள் எந்த ஸ்திரீயும் எந்தத் தொழிற்சாலையிலும் வேலை வாங்கப்படவில்லை

இச்சட்டத்துக்குட்பட்ட தொழிற்சாலைகளில் குழந்தைகளை வைத்து வேலை வாங்குவது கடுமையாகத் தடுக்கப்பட்டது. சம்பளம் கொடாமை, டிஸ்மிஸ் செய்யப்பட்டது, சம்பளத்துடன் ரஜா அளிக்க மறுத்தமை போன்ற பல விஷயங்கள் சம்பந்தமாகச் சுமார் 745 புகார்கள் தொழிலாளர்களிடமிருந்து இலாகாவினருக்கு வந்து சேர்ந்தன. புகார்கள் விசாரணை செய்யப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வருஷம் தொழிற்சாலைகள் இலாகா திருத்தியமைக்கப் பட்டது. பிரதேச இன்ஸ்பெக்டர்கள் எட்டு பேர்கள் நியமனம் செய்யப்பட்டனர்; அவர்களின் அதிகார எல்லை வரம்புகளிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. (1952 டிசம்பர் சென்னைச் செய்தி.)

சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் — 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

சென்ற மாத இதழில் ஒரு பஞ்சாயத்து விதிக்கவேண்டிய வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி இவைகளைப்பற்றிய ஷரத்துக்கள் விளக்கப்பட்டன. இவ்வரிகளும் அடியில் விவரிக்கப் படும் 'ஸர் சார்ஜ்' என்ற கட்டணமும் கட்டாயமாக ஒவ்வொரு பஞ்சாயத்தும் விதிக்கவேண்டும். 'ஸர் சார்ஜ்' பற்றிய சட்ட ஷரத்தை முதலில் கவனித்து, பஞ்சாயத்துச் சட்டத்தில் மேற்கொண்டு இருக்கும் ஷரத்துக்களை இங்கு கவனிப்போம்.

பத்திரங்களுக்கு 'ஸ்டாம்பு ஸர் சார்ஜ்' அல்லது சொத்துப் பராதீனங்களின் மீது வரி.

செக்ஷன் 67

1. ஒரு பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்படும் அடியில் கண்டவகையான பத்திரங்களுக்கு ஒரு வரி விதிக்கப்படும். இவ் வரியானது அந்தந்தப் பத்திரத்திற்கான ஸ்டாம்புக் கட்டணத்தின் மீது 'ஸர் சார்ஜ்' என்ற அதிக கட்டணம் விதிப்பதன் மூலம் வசூல் செய்யப்படும். கீழே ஒவ்வொரு பத்திற்கும் எதிரே குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையில் 5 சதவிகிதத்திற்கு மேற்படாமல் இருக்கும்படி இந்த 'ஸர் சார்ஜ்' விகிதம் சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை அனுசரித்து இப்பொழுது சர்க்கார் மேற்படி பத்திரங்களுக்கு ரூ. 100க்கு ரூ. 4 வீதம் 'ஸர்சார்ஜ்' வசூல் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கின்றனர். (28-5-1952) சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I-A பக்கம் 282—G. O. 1012.)

பத்திரத்தின் விபரம்	எந்தத் தொகையின் மீது சர்சார்ஜ் கட்டணம் விதிக்கப்படும்
(i) ஸ்தாவர சொத்து விற்பனை.	கிரயப் பத்திரத்தில் கண்டிருக்கும் பிரதிப் பிரயோஜனத் தொகை.
(ii) ஸ்தாவர சொத்துப் பரிவர்த்தனை.	பத்திரத்தில் எந்தச் சொத்துக்கு அதிக மதிப்பு காண்பிக்கப்பட்டிருக்கிறதோ அம் மதிப்பு.
(iii) ஸ்தாவர சொத்து நன்கொடை.	பத்திரத்தில் கண்டிருக்கும் சொத்து மதிப்பு.
(iv) ஸ்தாவர சொத்துச் சுவாதீன அடமானம் (ஒத்தி).	பத்திரத்தில் கண்ட அசல் தொகை.
(v) ஸ்தாவர சொத்துச் சாசுவதக் குத்தகை.	பத்திரத்தில் கண்டபடி முதல் 50 வருடங்களுக்குக் கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையில் 6ல் 1 பங்கு.

2. மேற்கண்ட கட்டணம் விதிப்பது அமுலுக்கு வந்த பிறகு பத்திரங்களில் கண்டிருக்கும் சொத்துக்களில் பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் சொத்துக்களுக்கு விவரங்கள் பிரத்தியேகமாகவும் மற்ற சொத்துக்களுக்கு விவரங்கள் பிரத்தியேகமாகவும் எழுதவேண்டுமென்று இந்திய ஸ்டாம்புச் சட்டத்தின் செக்ஷன் 27-இன் வாசகத்திற்கு அர்த்தம் செய்து வாசித்துக் கொள்ள வேண்டும். மேலும் ஸ்டாம்புச் சட்டத்தின் செக்ஷன் 64ல் சர்க்காரை ஏமாற்றும் எண்ணத்துடன் பத்திரங்களில் உண்மை விவரங்கள் மதிப்பு இவற்றை எழுதாமலிருப்பது குற்றமாகக் கண்டிருப்பதுபோல் பஞ்சாயத்தை ஏமாற்றும் எண்ணத்துடன் அவ்விதம் செய்வதும் குற்றமென்று அதற்கும் அர்த்தம் செய்ய வேண்டும்.

3. இவ் வரியை வசூலிப்பது, அதைப் பஞ்சாயத்துக்குக் கொடுப்பது, அதை வசூல் செய்வதற்கான செலவைச் சர்க்கார் பிடித்துக் கொள்வது இவ் விஷயங்களைப்பற்றி இச் சட்டஷரத்துக்களுக்குப் பொருத்தமாக விதிகள் செய்யச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

வசூலிக்க முடியாத தொகைகளை நஷ்டக் கணக்கில் எழுதிவிட பஞ்சாயத்திற்கு அதிகாரம்

விதிகளால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு, இனி வசூலிக்க முடியாதென்று பஞ்சாயத்து அபிப்பிராயப்படும் வரி, கட்டணம் அல்லது வேறு தொகைகளையும், அது சம்பந்தமாகக் கொடுக்க வேண்டிய வேறு தொகைகளையும், இவைகள் ஒப்பந்தப்படி அப் பஞ்சாயத்துக்குச் சேர வேண்டியவையாக இருந்தாலும் சரி, வேறு வகையில் சேரவேண்டியிருந்தாலும் சரி இவைகளைக் கணக்கிலிருந்து அடித்துவிடப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 68

ஆனால் பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய வரி, கட்டணம் அல்லது வேறு தொகைகளை வசூல் செய்து கொடுக்கும் பொறுப்பு கலெக்டரிடமோ, அவருக்குட்பட்ட அதிகாரியிடமோ இருந்தால், அத் தொகைகள் வசூலிக்க முடியாதவை என்று அவற்றைக் கணக்கிலிருந்து அடித்துவிடக் கூடிய அதிகாரம் ரிவின்யூ போர்டாருக்கும், அவர்களுடைய மேற்பார்வைக்குட்பட்டு கலெக்டர் அல்லது அவரிடம் இதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தருக்கும்தான் உண்டு.

பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் வசூல் செய்யும்படி கிராமப் பெரிய தனக்காரரைக் கேட்க பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.

இதற்காக ஏற்படும் விதிகளுக்குட்பட்டு, ஒரு பஞ்சாயத்துக் கிராமத்திலோ அதன் ஒரு பாகத்திலோ அதிகாரமுள்ள கிராமப் பெரியதனக்காரரையே அப் பஞ்சாயத்துக்குச் சேர வேண்டிய வரிகளையும் கட்டணங்களையும் வசூல் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் வசூல் செய்யப்படும் மொத்தத் தொகையில் $6\frac{1}{4}$ சதவிகிதத்திற்கு மேற்படாமல், கிராமப் பெரியதனக்காரருக்கு ஊதியம் கொடுக்கப்படும்; எவ்வளவு சதவிகிதம் ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்பதைக் கலெக்டர் பொதுவாகவோ குறிப்பிட்ட பஞ்சாயத்து விஷயமாகவோ நிர்ணயம் செய்வார்.

செக்ஷன் 69

பஞ்சாயத்து நிதி

(1) பஞ்சாயத்துக்கு வரும் எல்லாத் தொகைகளும் சேர்ந்து, 'பஞ்சாயத்து நிதி' என்று சொல்லப்படும் ஒரு நிதியாகும். அந் நிதியிலிருந்து தொகைகள் இச் சட்டப்படிக்கோ வேறு சட்டங்களின்படிக்கோதான் செலவு செய்யப்பட வேண்டும்; அல்லது உபயோகிக்கப்பட வேண்டும். ஆனால், விதிகளை அனுசரித்து, குறிப்பிட்ட ஒரு வரியையோ, அதிக வரியையோ குறிப்பிட்ட பொது அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடப் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு. அப்படிப்பட்ட தொகைகளைப் பற்றிய வரவு செலவுக் கணக்கு தனியாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

செக்ஷன் 70

(2) பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்பட வேண்டிய தொகைகள் அடியிற்கண்டவைகளாகும். அவையாவன:—

(1) இச்சட்டத்தின் 63ஆவது செக்ஷன்படி விதிக்கப்படும் வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி, வேறு வகை வரி அல்லது செஸ் அல்லது கட்டணம். (2) செக்ஷன் 67ன்படி வசூலாகும் பத்திர 'ஸர்சார்ஜ்' கட்டணங்கள். (3) 1920ஆம் வருடத்திய ஜில்லா போர்டு சட்டத்தின் செக்ஷன் 78இன்படி அக் கிராமத்தில் விதிக்கப்படும் 'லாண்டு ஸெஸ்' தொகையில் நான்கில் ஒரு பாகம். (4) 1920ஆம் வருடத்திய ஜில்லா போர்டு சட்டத்தின் செக்ஷன் 110இன்படி ஜில்லா உற்சவமாகத் தரம் பிரிக்கப்பட்டிருக்கிற உற்சவங்கள் தவிர, மற்ற விஷயங்களுக்காக விதிக்கப்படும் யாத்திரிகர் வரி. (5) 1933ஆம் வருடத்திய சென்னை வியாபார விளை பொருள் மார்கெட் சட்டத்தின் செக்ஷன் 11 (3) இன்படி மார்கெட் கமிட்டியால் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும் தொகைகள். (6) 1939ஆம் வருடத்திய சென்னைப் பொது ஜன சுகாதாரச் சட்டத்தின் 117-118 செக்ஷன்களின்படி அக் கிராமத்தில் விதிக்கப்படும் வரிகளும் சுங்கங்களும். (7) அப் பஞ்சாயத்து கிராமத்திலுள்ள ஜில்லா மார்கெட்களுக்கும், ஜில்லா போர்டு நிர்வாகத்திலுள்ள ஓடத் துறைகளுக்குமாக ஜில்லா போர்டால் கொடுக்கப்படும் சகாயத் தொகைகள். (8) அக் கிராமத்திலுள்ள கிராம நத்தங்களையும் வேறு பொது இடங்களையும் தாற்காலிகமாக அனுபவிப்பதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள். (9) இச் சட்டப்படிக்கோ விதிகளின்படிக்கோ விதிக்கப்படும் வேறு வகைக் கட்டணங்கள். (10) அக் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துவதற்காகச் சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும் திட்டப்படி ஜில்லா போர்டால் கொடுக்கப்படும் சகாய நிதிகள். (11) பஞ்சாயத்து நிர்வாகத்திலிருக்கும் தர்ம சொத்துக்கள் டிரஸ்டு சொத்துக்கள் இவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம். (12) இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு சர்க்காரால் மீண்டும் திருப்பி எடுத்துக் கொள்ளப்படும் ஊழிய இனாம்களின் மேல் விதிக்கப்படும் நிகரத் தீர்வை. (13) கிராமத்திற்குச் சொந்தமான மீன் பிடிக்கும் இடங்களிலிருந்து கிடைக்கும் வருமானம். (14) பஞ்சாயத்தின் நிர்வாகத்திலிருக்கும் ஓடத் துறைகளின் வருமானம். (15) திருப்பிக் கேட்கப்படாத தொகைகளும் பறிமுதல் செய்யப்பட்ட தொகைகளும். (16) ரோடு போடுவதற்கான சாமான்களை வெட்டி எடுப்பதற்காக சர்க்காரால் வசூல் செய்யப்படும் கட்டணம். (17) பஞ்சாயத்தின் அனுபவத்தில் விடப்பட்டிருக்கும் புறம்போக்குகளிலிருந்து கிடைக்கும் வருமானங்கள். (18) ரயத்துவாரி கிராமங்களில் புறம்போக்கு மரங்களிலிருந்து கிடைக்கும் வருமானம். (19) சர்க்காரிடமிருந்து பஞ்சாயத்து குத்தகைக்கு எடுத்திருக்கும் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம். (20) இச் சட்ட ஷரத்துக்களையோ இச் சட்டப்படி ஏற்படும் விதிகள் அல்லது உப விதிகளையோ அக் கிராமத்தில் மீறியதாக ஏற்படும் வழக்குகளில் ஒவ்வொரு வருடமும் மாஜிஸ்ட்ரேட்டுகளால் விதிக்கப்படும் அபராதத் தொகையில் பத்தில் ஒன்பது பங்குத் தொகை. (21) சர்க்காரால் கொடுக்கப்படும் நன்கொடைத் தொகைகள். (22) இவை தவிர, பஞ்சாயத்தின் நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்களிலிருந்தாவது ஊழியங்களிலிருந்தாவது அவை சம்பந்தமாகவாவது வரக்கூடிய தொகைகள்.

[தொடரும்]

எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4-8-0 ½ சேர் ரூ. 2-4-0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம்:— **ஜெயராம் வைத்தியசாலை**, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, **கும்பகோணம்**

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் **தனித்தனியான காகிதத்தில்**, பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர **ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள்** அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

1. **கேள்வி:** (L 2339 — சத்தியநாராயணன்— அய்யம்பேட்டை.) முஸ்லீம் ஒருவரை முதலாளியாகக் கொண்ட ஒரு கடையில் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் சிப்பந்திகளாக இருக்கிறார்கள். ஒரு வருடத்தில் ஒரு மாதச் சம்பளத்தைப் போனஸாக முதலாளி கொடுப்பது வழக்கம். முஸ்லீம் சிப்பந்திகளுக்கு ரம்ஜான் பண்டிகையின் போதும், கிறிஸ்தவர் சிப்பந்திகளுக்குக் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போதும், இந்துச் சிப்பந்திகளுக்குத் தீபாவளிப் பண்டிகையின் போதும் ஒரு மாதச் சம்பளத்தைப் போனஸாக முதலாளி கொடுப்பது வழக்கம். ஒரு ஆண்டில் ரம்ஜான் பண்டிகையின்போது முஸ்லீம் சிப்பந்திகளுக்கு மட்டும் போனஸ் கொடுத்துவிட்டு, மற்றச் சிப்பந்திகளுக்கு மேற்கண்டபடி போனஸ் தர முதலாளி மறுத்தால் அத்தொகையைச் சிப்பந்திகள் பெறுவது எப்படி? சட்டப்படி முதலாளி போனஸ் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவரா? பாரபட்சமாக நடந்துகொள்ளும் முதலாளியின் செயல் சரியா?

பதில்: 'போனஸ்' என்பதற்கு, 'வெகுமதி' என்றுதான் அர்த்தம். வெகுமதி அல்லது இனம் கொடுப்பது, முன்பெல்லாம் முதலாளியின் இஷ்டத்தைப் பொறுத்ததாகவே இருந்தது. சிப்பந்தியானவர் தம்முடைய சம்பளத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தலாமே ஒழிய, 'போனஸ்' கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்த முடியாமல்தான் இருந்தது. ஆனால் இப்போது 'போனஸ்' என்பது இருவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது முதலாளியும் குறிப்பிட்ட சிப்பந்தியும் செய்துகொள்ளும் ஒப்பந்தம் அல்லது ஏற்பாட்டில், அச் சிப்பந்திக்கு மாதம் இவ்வளவு சம்பளம், வருடம் ஒன்றுக்கு இவ்வளவு போனஸ், இரண்டும் கொடுக்கப்படவேண்டுமென்ற ஏற்பாட்டின் பேரில் வேலை செய்யும் சிப்பந்திக்கு, 'போனஸ்' என்பதும் ஒருவகைச் சம்பளமேயாகும். இவ்விதமான போனஸைக் கொடுக்கும்படி அச்சிப்பந்தி வற்புறுத்தலாம். அதற்குச் சிவில் கோர்ட்டிலும் தாவா போடலாம்; ஷாப் சட்டம் அமுலில் உள்ள இடங்களில் ஷாப் சட்ட அதிகாரிக

ளிடமும் புகார் செய்யலாம். போனஸ் கொடுப்பதாக ஏற்பாடு அல்லது ஒப்பந்தம் இல்லாத சிப்பந்தி, அதை வற்புறுத்த முடியாது. இதில் முஸ்லீம் முதலாளியானவர் இந்து அல்லது கிறிஸ்தவ சிப்பந்திகளையும் வைத்துக் கொள்ளவேண்டும் என்று அவரை எச்சட்டமும் கட்டாயப்படுத்தாத நிலைமையில், அவர் அவ்விதம் வைத்துக்கொண்டிருப்பது தாராள மனப்பான்மையைக் காண்பிக்கிறதே ஒழிய இதில் பாரபட்சப் பிரச்னை ஒன்றுமில்லை. மேலும், இந்திய அரசியல் சட்டப்படி அரசாங்கங்களும் சட்டங்களும் தான் மக்களுள் ஜாதி மதம் காரணமாக பாரபட்சம் காண்பிக்கக்கூடாதே ஒழிய, தனிப் பிரஜை ஒருவர் தம்முடைய சொந்த விஷயங்களில் பாரபட்சம் காண்பித்தாலும் அது சட்ட விரோதமாகாது.

2. கேள்வி: (L 2348-ராஜன்-கொழும்பு.) கணவனை இழந்த (இந்து) விதவை தன் பெயருக்கு ஒரு நிலம் வாங்கி இருந்தாள். அவள் இறந்தபின் அவளுடைய சகோதரியின் புத்திரனாகிய (ரிஜிஸ்டர் ஆகாத) அவளது அபிமான புத்திரனுக்கு ஷ நிலம் பட்டாவாகிப் பல வருடங்களாக அனுபவித்து வருகிறார். ஷ விதவையின் கணவனுடன் பிறந்த சகோதரருக்கு ஒரு பெண் வாரிசு உண்டு. அப்பெண்ணுக்கு இந்த நிலத்தில் வழக்காட உரிமை உண்டா?

பதில்: (1) கணவனுடைய ஐவேஜுகளைக் கொண்டு விதவை அந்நிலத்தை வாங்கி இருந்தால், விதவைக்குப் பின் அந்நிலம் கணவனுடைய அடுத்த வார்சைச் சேரும். கணவனுடைய சகோதரர் பெண் இந்து சட்டப்படி ஒரு வார்சுதான். ஆனால் வேறு நெருங்கிய வார்சுகள் இல்லாவிட்டால்தான் சகோதரர் பெண்ணுக்கு 'ஸ்திரீபந்து' என்ற முறைமையில் வார்சு பாத்தியம் ஏற்படும். (21 மதராஸ் 263 பார்க்கவும்.) (2) ஆனால் நிலம் வாங்கப்பட்டது விதவையின் சொந்தப் பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டிருந்தால் அது அவளுடைய சீதன சொத்தாகும். அவ்விதவைக்குப் பிரும்ம முறைப்படி கலியாணம் நடந்திருந்தால் சந்ததியில்லாத அவ்விதவையின் புருடனுடைய வார்சுகள்தான் அவளுடைய சீதன வார்சுகள். வேறு முறைப்படி அவருடைய கலியாணம் நடந்திருந்தால் அவளுடைய தாயாரும், பிறகு தகப்பனும், அவருடைய வார்சுகளும் தான் விதவையின் சீதன வார்சுகளாவார்கள். (3) சுவீகாரம் செய்துகொள்ளப்பட்ட மகனுக்குத்தான் வார்சு பாத்தியம் உண்டு. சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்படாமல் அபிமான புத்திரன் என்று அழைக்கப்படுபவருக்கு, 'மகன்' என்ற முறைமையில் வார்சு பாத்தியம் ஒன்றும் கிடையாது. ஆனால் விதவை இறந்த பிறகு அபிமான புத்திரன் அச்சொத்துக்களைச் சட்ட பூர்வமான வார்சுகளுக்கு விரோதமாக 12 வருடங்களுக்குமேல் அனுபவித்துவிட்டால் அவருக்கு அனுபோக பாத்தியத்தின் மூலம் சொத்து சித்தித்துவிடும்.

3. கேள்வி: (L 2373) ஒருவர் மற்றொருவரிடத்தில் புரோநோட்டுகள் எழுதிக் கொடுத்துப் பல தடவைகள் கடனாக வாங்கி இருக்கிறார். இக்கடனை ஏமாற்ற வேண்டுமென்கிற எண்ணங்கொண்டு தம் பேரில் இருக்கும் சொத்துக்களை எல்லாம் அவர் இன்னொருவர் பெயருக்குக் கிரயமாக மாற்றிவிடுகிறார். கடன் கொடுத்தவர் அச்சொத்துக்களின்மீது தொடர முடியுமா? முடியுமானால் அதற்கு மார்க்கம் எப்படி?

பதில்: கடன் கொடுத்தவருக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. (1) தமக்கு வர வேண்டிய கடனுக்காகத் தாவா செய்து டிக்ரி வாங்கி அச்சொத்துக்களை ஜப்தி செய்யலாம். சொத்துக்களைப் பெயர் இரவலாகக் கிரயம் வாங்கியவர் அவை தமக்குத்தான் பாத்தியப்பட்டவை என்று 'பாத்தியமனு'ப் போடக்கூடும். கடன் வாங்கியவர் கடனை மோசம் செய்ய, 'பெயர் இரவலாக'வே அச்சொத்தை வைத்திருக்கிறார் என்ற விஷயத்தை டிக்ரி பெற்றவர் ருசுச் செய்து அச்சொத்துக்களின் பேரில் தொடர இடமுண்டு. இதிலிருந்து விவகாரம் வளர்ந்து கொண்டே போகவும் இடமுண்டு. (2) கடன் வாங்கியவர் கெட்ட எண்ணத்துடன் தம் சொத்துக்களை எல்லாம் கிரயம் செய்ததே ஒரு 'இன்சால்வெண்ட் செய்கை' ஆகும். மூன்று மாதங்களுக்குள் கடன் வாங்கியவரை 'இன்சால்வெண்ட்' என்று பிரகடனம் செய்ய, கடன் கொடுத்தவர் மனுக் கொடுக்கலாம். கடன் வாங்கியவரை 'இன்சால்வெண்ட்' என்று கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்டபின், 'இன்சால்வென்சி சட்டப்படி அவர் செய்த கிரயத்தை ரத்துச் செய்து அதிலிருந்து கடன்காரர்களுக்கு வீதாசாரத் தொகையும் கொடுக்கப்படலாம். இவ்வித நடவடிக்கைகள் எடுப்பதற்கும் சில நிபந்தனைகள் உண்டு.

4. கேள்வி: (ராபர்ட்—சவயபுரம்) மைனர் பஞ்சாயத்தாகிய எங்கள் கிராமத்தில் மொத்தம் 3653 வாக்காளர்கள் இருக்கின்றனர். 5 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் கிராமத்திற்குப் பெட்டி ஓட்டா அல்லது பகிரங்க ஓட்டா? பெட்டி 'ஓட்' வேண்டுமானால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்?

பதில்: முன்பு 'மைனர்' பஞ்சாயத்து 'மேஜர்' பஞ்சாயத்து என்று இருந்தது. புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்றும் இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துச் சட்டத்தின் 5-ஆவது செக்ஷன்படி 5000க் குறையாத ஜனத்தொகையும் ரூ. 10,000க்கு குறையாத வருட வருமானமும் உள்ள பஞ்சாயத்துக்கள் முதல் வகுப்பு என்றும் மற்றவை இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்புப் பஞ்சாயத்துத் தேர்தல்கள் கட்டாயமாகப் பெட்டி 'ஒட்' முறைப்படிதான் நடத்தப்பட வேண்டும். ஆனால் தேர்தல் அதிகாரியானவர் குறிப்பிட்ட இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களிலும் பெட்டி 'ஒட்' முறைப்படியே தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று உத்தரவிடலாம். அவ்விதம் தேர்தல் நடக்கவேண்டுமென்று கேட்பவர்கள் அந்த அதிகாரிக்கு மனுப் போடலாம். தேர்தல் அதிகாரி (Election Authority) என்பது ஸ்தலஸ்தாபன இன்ஸ்பெக்டரைக் (Inspector of Municipal Councils and Local Boards) குறிக்கும்.

5. கேள்வி: (ராமன் — திருநெல்வேலி.) 1952 நவம்பர் "வக்கீல்" இதழில், ரிஜிஸ்டர் செய்யப்படாத பாக உடன்படிக்கையைக் கொண்டு கோர்ட்டில், 'விபக்தர்' களாயினர் என்று நிரூபித்துக் கொள்ளலாமென்றும், ஆனால் எந்த ஸ்தாவர சொத்து யாருடைய பாகத்திற்குக் கிடைத்தது என்று நிரூபித்துக் கொள்ள முடியாதென்றும் கண்டிருக்கிறது. ஆனால் ரிஜிஸ்டர் செய்யப்படாத பாக உடன்படிக்கைப்படி அவரவர்கள் சொத்துக்களை அவரவர்களே ரிஜிஸ்டர் பத்திரத்தின் மூலம் கிரயம் செய்து கொடுத்து, ஒவ்வொரு கிரயப் பத்திரத்திலும் இதர பாகஸ்தர்கள் சாட்சிக் கையெழுத்திட்டிருந்தால், ஷை ரிஜிஸ்டர் கிரய தஸ்தவேஜுகளைக் கொண்டு ரிஜிஸ்டர் செய்யப்படாத பாக உடன்படிக்கையில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தையும் இன்னது இன்னாருக்கென்று கோர்ட்டில் நிரூபித்துக் கொள்ளலாமா?

பதில்: ரிஜிஸ்டரான கிரயப்பத்திரங்களின் மூலமாகவே அவ்விஷயத்தை ருசுப்பிப்பது சாத்தியமானல் அப்படிச் செய்ய சட்டத்தில் தடை ஒன்றுமில்லை.

6. கேள்வி: (ஷை) ஒருவருக்குக் குழந்தையில்லாமல் தன் சகோதரியின் மகனை வளர்த்து, கலியாணமும் செய்துவைத்து, அவனுக்கு ஒரு உயில் சாசனமும் செய்திருந்தார். சிறிது காலத்தில் அவருக்குக் கண்கள் மங்கி பார்வை குன்றிவிட்டது. அது சமயம் ஷையார் மனைவி சூழ்ச்சியால் அவரை வசப்படுத்தி, ஷை பையனையும் வெளியே அனுப்பி விட்டுச் சொத்தையும் தன் பெயருக்கு ஆக்கிக்கொண்டாள். இப்படிச் செய்திருப்பதைப்பற்றி வளர்ப்புப் பையன் ஏதாவது நடவடிக்கை செய்ய முடியுமா? அதனால் பலன் கிடைக்குமா?

பதில்: 'வளர்ப்புப் பையன்' என்பவருக்கு முதலில் உயில் எழுதி இருந்தாலும், உயில் எழுதியவர் எப்பொழுது வேண்டுமானாலும் அதை ரத்துச் செய்து வேறு தஸ்தவேஜியோ உயிலோ எழுதிக்கொள்ளலாம். முதல் உயில் ரத்துச் செய்யப்படாவிட்டாலும் எது கடைசி உயிலோ அதுதான் செல்லும். கண்கள் மங்கி, பார்வை குன்றிவிட்டவர்களும் நல்ல சித்த சுவாதீனத்துடன் இருந்தால் போதும். அவர்கள் உயில் மூலமாகவோ வேறு பத்திரங்கள் மூலயாகவோ தங்கள் சொத்துக்களைக் கொடுக்கலாம். அவ்விதம் ஏற்பட்டிருக்கும் தஸ்தவேஜு அல்லது உயிலை வளர்ப்புப் பையன் ஆக்ஷேபிக்க முடியாது.

7. கேள்வி: (L 2350 சாத்தப்பன் — மலாயா.) இரு சகோதரர்கள் நடத்திய (கூட்டுக்) கடையில் ஏற்பட்ட கடனுக்கு, மூத்தவர் இறக்க, இளையவர் இன்சால்வென்ட்டு ஆகிறார். பொதுச் சொத்துக்கள் ஏலத்துக்கு வந்து, மூத்தவர் பாகத்தின் தொகை அபிஷியல் ரிசீவரிடம் டிபாசிட் இருப்பதை, இன்சால்வென்ஸி ஆபீசரிடம் கணக்குக் கொடுக்காத கடைக்கடன் பாக்கிதார்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் மூத்தவருடைய வார்சுகள் பொதுச் சொத்துக்களில் பாத்தியதை கொண்டாடவில்லை. ஷை கடையின் கடன்காரர்கள் யாரும் ஷை வார்சுகளைத் தொடர முடியுமா? அப்படியானல் எவ்வளவு நாளைக்குள் தொடரமுடியும்?

பதில்: இந்தியக் கூட்டு வியாபாரச் சட்டத்தின் (Indian Partnership Act-1932) செக்ஷன் 49-ல் கண்ட விதி பின் வருமாறு:— "ஒரு கூட்டு வியாபாரத்திலிருந்து கொடுக்கப்படவேண்டிய பொதுக் கடன்களும் இருந்து, அது தவிர எந்தக் கூட்டாளியும் சொந்த முறையில் கொடுக்கவேண்டிய தனிக் கடன்களும் இருந்தால் கூட்டு வியாபாரத்தைச் சேர்ந்த ஐவேஜுகளிலிருந்து முதலில் கூட்டுப் பொதுக் கடன்கள் கொடுக்கப்படவேண்டியது; கூட்டுப் பொதுக் கடன்கள் கொடுக்கப்பட்டபின் கூட்டு ஐவேஜு பாக்கி இருந்தால், அதில் ஒவ்வொரு கூட்டாளிக்கும் பாத்தியமுள்ள வீதத்திலிருந்து அவருடைய தனிக் கடன்கள் கொடுக்

ஆவணக் காப்பக

கப்பட வேண்டியது; அதேபோல் ஒரு கூட்டாளியின் தனிச் சொந்த சொத்துக்களைக் கொண்டு முதலில் அவருடைய தனிக் கடன்கள் கொடுக்கப்படவேண்டும்; தனிக் கடன்கள் கொடுக்கப்பட்டபின் பாக்கியுள்ள தனிச் சொத்துக்கள் கூட்டுக் கடன்களுக்கு [illegible] என்று இருப்பதால், கூட்டுக் கடையின் கடன்காரர்கள் முதலில் இருவருக்கும் உள்ள கூட்டுச் சொத்துக்களின் பேரில்தான் தொடரவேண்டும். அப்படியும் அவர்களுடைய கடன் ஜாடாவும் தீராவிட்டால், கூட்டாளியின் தனிச் சொத்தின் பேரிலும் பாக்கிக்குத் தொடரலாம். சாதாரணமாய்க் கடன் கொடுக்கப்படவேண்டிய தேதியிலிருந்து மூன்று வருடங்கள்தான் காலாவதிக்கெடு.

8. கேள்வி: (L 2399.) ஒருவருடைய வீட்டின் பக்கத்திலுள்ள வேறு ஒருவருக்குச் சொந்தமான காலித் தோட்டத்தில் வீட்டிற்கு இடைஞ்சலாக, மா, பலா மரங்கள் வைத்து வளர்த்து வருகிறார். மரங்களின் கிளைகள் வீட்டின்மேல் படர்ந்தும் வளைந்தும் வந்து வீட்டின் ஓடுகளை உடைத்துச் சேதப்படுத்தி வருகின்றன. வீட்டுக்காரர் கோர்ட்டுக்குப் போகாமல் ஷை மரங்களை வேரோடு வெட்டலாமா, அல்லது மரத்தின் கிளைகளை மட்டில் வெட்டலாமா? நோட்டீஸ் கொடுத்து வெட்ட வேண்டுமா?

37718

பதில்: வீட்டின் சொந்தக்காரருக்கு, தாமே இந்த உபத்திரவத்தை (Nuisance) நீக்கிக் கொள்ள உரிமை உண்டு. தம்முடைய வீட்டிற்குச் செங்குத்தாக ஆகாயம் வரை இருக்கும் இடங்கள் எல்லாம் வீட்டுக்காரருடையதே. தம்முடைய வீட்டுக்குமேல் நீண்டு வரும் மரக் கிளைகளை மட்டுமேதான் வீட்டுக்காரர் வெட்டி விடலாம். பக்கத்து நிலக்காரருடைய மரத்தை வேரோடு வெட்டி எரிய அவருக்கு உரிமை இல்லை. நோட்டீஸ் கொடுத்து வெட்டுவது நல்லது. நோட்டீஸ் கொடுக்காமலே கூட வெட்டி விடலாமென்று சில ஆங்கில நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். தாமே வெட்டா விட்டாலும், கோர்ட்டில் தாவா செய்து அக் கிளைகளை வெட்டும்படியும் செய்யலாம். வெட்டப்பட்ட கிளைகள் மரக்காரருடைய சொத்தாகும். (1951 "வக்கீல்" செப்டம்பர் இதழில் "பொல்லாத மரங்கள்" என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டிருக்கும் ஹைகோர்ட் தீர்ப்பைப் பார்க்கவும்.)

9. கேள்வி: (சுப்பிரமணியம்—பூலாம்பட்டி.) சென்னை ராஜ்யத்தில் இப்போது நடந்துவரும் பஞ்சாயத்துத் தேர்தல்கள், ஏற்கனவே இருந்துவரும் பஞ்சாயத்துக்களுக்கு மட்டும் தான் தேர்தலா? அல்லது சென்னை அரசாங்கத்தின் புதிய திட்டப்படி 2000 ஜனத்தொகைக்குமேல் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்கள் உண்டா? இல்லை என்றால் அது அமுலுக்கு வருவது எந்தக் காலம்?

பதில்: புதிய பஞ்சாயத்துச் சட்டம் சென்னை ராஜ்யத்தில் **1-4-1951** முதலே அமுலுக்கு வந்துவிட்டது. ஏற்கனவே இருந்த பஞ்சாயத்துக்களே தாற்காலிகமாகப் புதிய பஞ்சாயத்துச் சட்டப்படி அமைக்கப்பட்டதாக அச்சட்டத்திலேயே இருப்பதால், அவைகள் எல்லாவற்றிற்கும்தான் இப்போது புதிய சட்டப்படி தேர்தல் நடக்கும்.

10. கேள்வி: (ராபர்ட் — சவயபுரம்) (1) ஒரு மிஷன்ஸ்கூலில் உபாத்தியாயராக வேலை பார்ப்பவர் அதே கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தலில் நிற்கலாமா? (2) ஒரு கிராமத்திலுள்ள பஞ்சாயத்து மெம்பர்களும் தலைவரும் அங்கத்தினர்களாக இருந்து நடத்தும் ஒரு பொது ஸ்தாபனத்தில் சம்பளம் வாங்கி வேலை செய்யும் ஒருவர் அதே கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தலில் நிற்கலாமா? (3) ஒரு கிராமத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவரிடம் மாதச் சம்பளம் வாங்கி வேலை செய்யும் ஒருவர் அதே கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தலில் மெம்பர்ஸ்தானத்தில் போட்டியிடலாமா?

பதில்: (1) நிற்கலாம் (2) நிற்கலாம் (3) நிற்கக்கூடாது.

11. கேள்வி: (முத்துக்கிருஷ்ண செட்டியார்-திருவேங்கிபுரம்) புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் ஒரு கிராமம் என்பது பல சிறு ஊர்கள் அடங்கிய ஒரு ரிவின்யூ கிராமமா அல்லது ஒரே ஊரை மாத்திரம் குறிக்குமா? 500, 5000, 10000 என்ற ஜனத்தொகை ஒரு ரிவன்யூ கிராமத்தின் ஜனத்தொகையா, அல்லது ஒரு ஊரின் ஜனத்தொகையா?

பதில்: புதிய பஞ்சாயத்துச் சட்டத்தில் ஜனத்தொகை 500க்கு குறையாத ஒவ்வொரு 'ரிவன்யூ' கிராமத்திற்கும் ஒரு தனிப் பஞ்சாயத்து அமைக்கவேண்டுமென்று இருக்கிறது. இரண்டு மூன்று 'ரிவன்யூ' கிராமங்களைச் சேர்த்து ஒரு பஞ்சாயத்துக் கிராமம் அமைக்கவும் சட்டத்தில் இடமுண்டு. ஆனால் ஒரே 'ரிவன்யூ' கிராமத்தில் அடங்கிய பல ஊர்களில் ஒன்று எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதற்கு மட்டில் ஒரு பஞ்சாயத்து அமைக்கச் சட்டம் இடம் தரவில்லை. ஜனத் தொகை குறிப்பிடப்படுவது 'ரிவன்யூ' கிராமத்திற்குத் தான். (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 3.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor*:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

*

பெங்களூர்
காஞ்சிபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

டலாயத் தெரு,
பகோணம்.

நாட்டரசன்கோட்டை.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் TRADE MARK புகையிலை
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி,
உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நி. 20.
புதுக்கோட்டை.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED TRADE MARK



பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற
சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பல்காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat &
B. BALAPATTABI CHE
246, VYSYAL STREET, C

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.